JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 13 | இதழ்: 7 | செப்டம்பர் 2022 | ஆண்டு சந்தா ₹100/



# வனைந்திடுவார்!

உனக்குள் இருக்கும் பொக்கிஷத்தை

உலகிற்கு காட்ட உன்னை வனைந்திடுவார்

# INDEX

வாலிபர் உலகம்

04 தேவனுக்கு ஏற்ற பாத்திரம்...

தேவனுக்கு பிரியமானது... 12

20 PETRA

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in

JESUS REDEEMS MINISTRIES

**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார்
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

# தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். மறுபடியுமாக இந்த வாலிபர் உலகம் பத்திரிக்கையின் மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இம்மாதம் "வனைந்திடுவார்" என்ற வார்த்தையை மையமாகக் கொண்டு அநேக காரியங்களை தியானித்து, கற்றுக்கொள்ள போகிறோம். ஒரு குயவன் களிமண்ணை எடுத்து அதை பிசைந்து அதை உபயோகமுள்ள பாத்திரமாக வனைய வேண்டும் என்று முற்படுவார். எந்த களிமண்ணும் குயவன் கைகளில் ஒரு உபயோகமுள்ள பாத்திரமாக மாற முடியும்.

ஆனால் அதற்கு அந்த களிமண் பல்வேறு செயல்முறைகளை கடந்து செல்ல வேண்டும். முதலில் அதிலிருந்து களிம்பு நீக்கப்பட வேண்டும். பின்பு நன்றாக மிதிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்த களிமண்ணின் தன்மை மென்மையாக மாறி, குயவன் விரும்புகிற வடிவத்தில் அது உருவாக முடியும். சில நேரங்களில் அந்த களிமண் வனைய முடியாமல் இருப்பதினால் அது கெட்டுப் போவதும் உண்டு. அப்படித்தான் அநேக வாலிபர்கள் தங்களை குயவனின் கரங்களில் விட்டுக் கொடுக்காத போது, அவர்கள் வாழ்க்கை சீரழிந்து விடுகிறது.

இப்படித்தான் ஒரு வாலிபனுக்குள் நன்றாக படித்து, முன்னேறி, சாதிக்க வேண்டும் என்ற கனவு இருந்தது. பத்தாம் வகுப்பு வரை தன்னுடைய கனவை நோக்கி சரியாக பயணித்தான். ஆனால் குடும்ப சூழலும், சமுதாயமும் அவனை விட்டு வைக்கவில்லை. பதினோராம் வகுப்பு பயிலும் போது, நண்பர்களோடு சேர்ந்து, ஆசிரியர்களுக்கு கீழ்ப்படியாமல், தவறான நபர்களுடன் நட்பு ஏற்பட்டு, பின்பு ரவுடியாக மாறி, கொலை, கொள்ளைப் போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபட்டு, சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக மாறினான்.

நமக்கும் நம் வாழ்வை குறித்து அநேக கனவுகள் இருக்கலாம். அது நிறைவேற வேண்டுமென்றால் நம்மை குயவன் கையில் ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒரு அழகிய பாத்திரமாக உருவாக முடியும். ஒருவேளை விட்டுக் கொடுக்கத் தவறினால், யாருக்கும் உபயோகம் இல்லாமல் கெட்டுப் போகவும் வாய்ப்புண்டு. இன்றைக்கு உலகில் ஜொலித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு பாத்திரமும், தங்களை குயவன் கையில் பொறுமையோடு, தாழ்மையோடு ஒப்பு கொடுத்ததால் தான் இன்றைக்கு ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் ஒரு தற்காலிக வாழ்க்கை வாழும் இந்த உலகில், தலைசிறந்த விஞ்ஞானிகள், மருத்துவர்கள், சாதனையாளர்கள், கலைஞர்கள் மற்றும் கலை வல்லுனர்களை உருவாக்கும் சிற்பிகளாக ஆசிரியர்கள் திகழ்கிறார்கள். ஆசிரியர் என்பவர் எதிர்கால தலைவர்களையும், சாதனையாளர்களையும் உருவாக்கி வனையும் வடிவமைப்பாளர்கள். சிலர் அதை கடமைக்காக செய்கிறார்கள். ஆனால் பலர் அதை தங்களுடைய கடமையாகவே கருதி, கண்ணும், கருத்துமாக சேவை செய்கிறார்கள்.

இன்றைக்கும் நீங்கள் உங்கள் பரம குயவனிடம் உங்களை ஒப்பு கொடுக்கும் போது, அவர் உங்களை சிறந்த முறையில், பரம பணியை செய்ய, பக்குவமாக உருவாக்கி, பயன்படுத்த முடியும்.

ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான் (2 தீமோத்தேயு 2:21).




கிறிஸ்துவின் பணியில்,

அவினாஷ்

# தேவனுக்கு ஏற்ற பாத்திரம்...



சாட்சி: ஜிஷ்யா

**சகோதரி நிர்மலா மேரியின் அப்பா இரட்சிக்கப்பட்டவர். தாய் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்தவர்கள். இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த சகோதரி நிர்மலா மேரியை இயேசு கிறிஸ்து இரட்சித்து இன்றைக்கு அநேகருக்கு உபயோகமுள்ள பாத்திரமாக எப்படி பயன்படுத்துகிறார் என்பதை அவர்களே நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.**

**உங்களது சிறுபிராயம் மற்றும் குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?**

நான் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் திரு. சாமுவேல் மனோகர், திருமதி. டோமினிக் சொர்ண ஆரோக்கியம் தம்பதியருக்கு இரண்டாவது மகளாகப் பிறந்தேன். எனக்கு ஜோஸ் ஐசக் என்ற ஒரு அண்ணன் இருக்கிறார். அவர் சென்னையில் பணிபுரிந்து வருகிறார். எனது அப்பா C.S.I. சபையை சேர்ந்தவர். எனது அம்மா ரோமன் கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்தவர்கள். சிறுவயதிலிருந்தே எனது தாயார் எங்களை R.C. திருச்சபைக்கு அழைத்துச் சென்று அந்த பாரம்பரியத்தின்படி வளர்த்தார்கள். ஒவ்வொரு வாரமும் தவறாமல் ஆலயத்திற்கு செல்வேன். ஆனால் இயேசுவுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல்தான் வாழ்ந்தேன். வேதம் வாசிக்காத, ஜெபிக்காத ஒரு உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். சினிமா படங்கள் பார்ப்பது, பாடல்கள் கேட்பது என்று என் சிறுவயது வாழ்க்கைப் போய்க் கொண்டிருந்தது. எனது அப்பா இரட்சிக்கப்பட்டவர் என்பதால் வேதம் படித்து ஜெபிக்க சொல்வார்கள். அப்போதெல்லாம் அதை நான் காதில் வாங்கவே மாட்டேன்.



**உங்களது சிறுபிராயத்தைப் பற்றி சொன்னீர்கள்... உங்களது படிப்பைப் பற்றி சொல்லுங்களேன்?**

பள்ளிப் படிப்பில் எப்பொழுதும் முதல் மூன்று இடங்களுக்குள் வருவேன். கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றிருக்கிறேன். ஆனால் என் வாழ்க்கையில் சமாதானம்



இல்லை. பிரச்சனைகளும் பாடுகளும் நிறைந்ததாகவே இருந்தது. நண்பர்களுக்காகவும் நட்பிற்காகவும் ஏங்கியிருக்கிறேன். ஆனால் ஏமாற்றங்களும் கண்ணீருமே கிடைத்தது. எனக்கு சிறுவயதிலிருந்தே நண்பர்களே கிடையாது. ஏனென்றால் என்னுடைய குணநலன்கள் அவர்களுடைய குணநலன்களோடு ஒத்துப் போகாததால் என்னோடு யாரும் சேரவே மாட்டார்கள்.

**ஒகே... நன்றாக படித்தீர்கள்... சிறுவயதிலிருந்தே உங்களுக்கு நண்பர்கள் இல்லை என்று சொன்னீர்கள்... எப்படி இயேசுவைப் பற்றி அறிந்தீர்கள்?**

என் அப்பா C.S.I. சபையை சேர்ந்தவர் மற்றும் இரட்சிக்கப் பட்டவர் என்பதால் இயேசு ஒருவரே தெய்வம் என்றும் சிலை வழிபாடு செய்யக்கூடாது என்றும் சொல்வார்கள். என் தகப்பனார் நான் சிறுவயதாக இருக்கும் போதிலிருந்தே தினமும் ஜெபிப் பார்கள். நான் 6ம் வகுப்பு படிக்கும் போதிலிருந்து எனது வீட்டுப் பக்கத்தில் உள்ள ஒரு அக்கா என்னை ஆவிக்குரிய சபை மற்றும் வாலிபர் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கு அவர்கள் ஜெபிப்பதைப் பார்த்த எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 8ம் வகுப்பு படிக்கும்போது ஜெபிக்கவும், வேதம் வாசிக்கவும் ஆரம்பித்தேன். ஆனால் இரட் சிப்பைக் குறித்து எதுவும் தெரியாது. உலகப்பிரகாரமான வாழ்க்கை தான் வாழ்ந்துக் கொண்டிந்தேன். 12ம் வகுப்பு வரை என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கை இப்படியே போய்க் கொண்டிருந்தது.









**ஒகே... சிறுவயதிலிருந்தே இயேசுவை தெரியும்... எப்பொழுது இரட்சிக்கப்பட்டீர்கள்?... அதன்பிறகு உங்கள் வாழ்க்கையை ஆண்டவர் எப்படி மாற்றினார்?**

2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 'ஜெபிக்கலாம் வாங்க' என்ற நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நான் பார்த்து வந்தேன். மோகன் அங்கிள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாக கேட்பேன். ஏப்ரல் மாதம் இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். நான் இரட்சிக்கப்படும்பொழுது 11ம் வகுப்பு முடித்து 12ம் வகுப்புகளுக்கு நுழைகிற நேரம். நான் 11ம் வகுப்பில் எந்த குரூப் எடுத்து படிப்பது என்ற குழப்பம் எனக்குள் இருந்தது. எனது உறவினர் ஒருவர் இயேசுவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடு என்று சொன்னார்கள். நானும் இயேசுவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தேன். இயேசுவின் சித்தப்படி Maths-Bio. குரூப் கிடைத்தது. 11ம் வகுப்பில் 515 மதிப்பெண்கள் எடுத்தேன். 12ம் வகுப்பில் தோல்வி அடைவேன் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு 563 மதிப்பெண்கள் பெற்று வகுப்பில் முதல் மாணவியாக தேவன் என்னை உயர்த்தினார். சந்தோஷம், சமாதானம் கிடைத்தது. நான் இயேசுவை எப்பொழுது என் நண்பராக ஏற்றுக் கொண்டேனோ, அப்போதிலிருந்து எனக்கு ஆவிக்குரிய நண்பர்களையும் கொடுத்தார். எனக்கு இதற்கு முன்பு எந்த தோழிகளும் இல்லை. குடும்பத்தில் ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். தேசத்திற்காகவும், மற்றவர் களுக்காகவும் ஜெபிக்கக் கூடிய கிருபையை தேவன் கொடுத்தார். கோபம், எரிச்சல் போன்ற கெட்ட சுபாவங்களையும் மாற்றினார்.

**சூப்பர்... நிறைய மாற்றங்கள் உண்டானது... இரட்சிக்கப்பட்ட பின்பு உங்களது ஆவிக்குரிய வாழ்க்கை எப்படி இருக்கிறது?**

2020ஆம் ஆண்டு இரட்சிக்கப்பட்டேன். தேவனின் சித்தத்தை அறிந்து ஜெபிக்க கற்றுக் கொண்டேன். 2021ஆம் ஆண்டு எழுப்புதல் அக்கினியை பரவ செய்வோர் முகாமில் கலந்து கொண்டு அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். அதன்பிறகு ஊழியம் செய்ய வேண்டுமென்ற வாஞ்சையைக் கொடுத்தார். இப்பொழுது கைப்பிரதி ஊழியம், சுவிசேஷ ஊழியம், கிராம ஊழியம், வாலிபர் ஊழியம் என்று ஒவ்வொரு



வாரமும் ஊழியம் செய்து வருகிறேன். சில காரியங்களை வெளிப்படுத்தி அதற்கான பாரத்தைக் கொடுத்து ஜெபிக்க வைத்து வருகிறார். என்னுடன் பயிலும் மாணவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து வருகிறேன். இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களிலிருந்தே பள்ளியில் மதிய உணவு இடைவேளையில் நானும் இயேசுவை அறியாத 10 தோழிகளுமாக சேர்ந்து தினமும் 15 நிமிடம் ஜெபிப்போம்.

**சூப்பர்... சுவிசேஷம் அறிவித்து வருகிறேன் என்று சொல்கிறீர்கள்... தற்போது நீங்கள் என்ன படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?**



நான் திருநெல்வேலியில் உள்ள சேவியர் கல்லூரியில் B.Sc Physics இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். 12ம் வகுப்பு படித்து முடித்தவுடன் எனக்கு இயற்பியல் (Physics) எடுக்க வேண்டுமென்று ஆசை. ஆனால் என் உறவினர்களின் அறிவுரைப்படி கணித பிரிவிற்கு விண்ணப்பித்தேன். நீட் தேர்வும் எழுதி விட்டு கர்த்தரின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தேன். கர்த்தர் என் விருப்பத்தின்படி, நான் விரும்பின கல்லூரியில் கர்த்தரின் சித்தப்படி இயற்பியல் (B.Sc Physics) சேரும்படி கிருபை செய்தார். நான் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை தமிழ் வழி கல்வி தான் படித்தேன். கல்லூரியில் எல்லாமே ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். கொஞ்சம் பயமாகவே இருந்தது. பாடங்களில் ஏதாவது சந்தேகம் என்றால் இயேசுவிடத்தில் கேட்பேன். இயேசு எனக்கு ஒவ்வொன்றாக சொல்லி கொடுத்து புரிய வைப்பார். கல்லூரியிலும் நல்ல மதிப்பெண் எடுத்து வகுப்பில் முதல் மாணவியாக வருவதற்கு கர்த்தர் ஞானம் கொடுத்து நடத்தி வருகிறார்.

**ஒருநாள் நான் ஜெபிக்கவில்லை என்றால், அந்த நாள் எனக்கு ஏதோ ஒன்றை இழந்து விட்டது போல் இருக்கும்**

**ஓகே... நன்றாக படிக்க கர்த்தர் கிருபை கொடுத்தார்... இரட்சிக்கப்படுவதற்கு முன்பு செய்து வந்த பாவமான காரியங்களை எப்படி மேற்கொண்டீர்கள்?**

ஆரம்ப நாட்களில் தவறான சிந்தனைகள் வரும், படம் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் போன்ற பல போராட்டங்கள் வந்தது. எல்லா பாவங்களையும் அறிக்கையிட்டு ஜெபிப்பேன். எப்பொழுது நான் அபிஷேகம் பண்ணப்பட்டேனோ, அதன்பிறகு ஆவியானவர் எனக்கு உதவி செய்தார். அனுதினமும் காலையில் எழுந்து ஜெபிப்பதன் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் பெலனடைந்தேன். ஒருநாள் நான் ஜெபிக்கவில்லை என்றால், அந்த நாள் எனக்கு ஏதோ ஒன்றை இழந்து விட்டது போல் இருக்கும். அனுதினமும் ஜெபிக்கவும் என் ஆவிக்குரிய வாழ்வில் பெலனடையவும், ஆவிக்குரிய வாழ்வில் வளரவும் ஆண்டவர் கிருபை செய்து வருகிறார். இப்பொழுது எந்தவிதமான பாவ போராட்டங்களும் என்னை நெருங்க முடியாமல், தேவன் என்னை அவருடைய இரத்தத்தினால் கழுவி பாதுகாத்து வருகிறார்.

**சூப்பர்... பலவிதமான பாவப் போராட்டங்களில் இருக்கும் வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வாழ்க்கையில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கும் அந்தப் பிரச்சனைகளைப் பார்க்காமல், இயேசுவை மட்டும் நோக்கிப் பாருங்கள். உலகப்பிரகாரமான காரியங்களில் அடிமைப்பட்டிருந்தால் அதை இயேசுவிடம் ஒப்புக் கொடுக்கும் போது, கர்த்தர் எல்லாவற்றையும் மாற்ற வல்லவராக இருக்கிறார். இயேசு என்னுடைய சுபாவங்களை மாற்றினது போல, உங்களிடம் காணப்படும் வேண்டாத சுபாவங்களையும் மாற்றுவார். உங்களை இயேசுவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும் போது, அவர் உங்களுக்கு நன்மையானதையே செய்வார்.

**அன்பான வாலிபர்களே! வாழ்க்கையில் சந்தோஷம் சமாதானம் இல்லாமல் இருந்த சகோதரி நிர்மலாவை இயேசு இரட்சித்து சந்தோஷத்தை, சமாதானத்தைக் கொடுத்து உயர்த்தி வைத்திருக்கிறார். நீங்கள் கூட இன்றைக்கு ஏதோ ஒரு பாவ அடிமைத்தனத்திலிருந்து வெளியே வர முடியாமல், சந்தோஷம், சமாதானம் இல்லாமல் இருப்பீர்களானால், இன்றைக்கே பாவங்களை அறிக்கையிட்டு தேவனிடத்தில் ஒப்புக் கொடுங்கள். தேவன் உங்களையும் அவருக்கு ஏற்ற பாத்திரமாக வனைந்து பயன்படுத்துவார்! ●**

# AMOS

## சலுகையை தவறாக பயன்படுத்தினபடியால் நியாயத்தீர்ப்பு

அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதமும் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் மூன்றாவது புத்தகமான "ஆமோஸ்" பற்றி சுருக்கமாகக் காணலாம்.

### அறிமுகம்

ஆமோஸ் முதலாவது கொடுத்த தேவசெய்தி நியாயத்தீர்ப்பாயினும் அதை நம்பிக்கையின் செய்தியோடு முடிக்கிறார். ஆண்டவர் முழு உலகையும் ஆளுபவர். ஓர் போர் வீரராக தன் அதிகாரத்தை எதிர்த்தவர்களை நியாயத்தீர்க்க வருவார். தேவனுடைய உடன்படிக்கையை மீறிய இஸ்ரவேலரைத் தண்டிப்பார். உலகப்பிரகாரமான ஆசைகளில் தரித்திருந்த எரொபெயாமின் காலத்தில் வடக்கு சாம்ராஜ்யத்தில் பாவங்கள் பெருகிறது. நியாயத்தீர்ப்பின்றி தப்பிக்க ஒரே வழி மனந்திரும்புவதே என்று ஆமோஸ் வழிகாட்டுகிறார்.



ஆசிரியர்: ஆமோஸ்
காலம்: கி.மு. 755 - 760
அதிகாரங்கள்: 9
வசனங்கள்: 146
வார்த்தைகள்: 4, 217

### முக்கிய நபர்கள்:

ஆமோஸ்
யூதாவின் இராஜாவாகிய உசியா,
இஸ்ரவேலின் இராஜாவாகிய எரொபெயாம்

### ஆமோஸ் சுருக்கம்

- நூலாசிரியர் கருப்பொருள் (1:1,2 வசனங்கள்)
- ஆமோஸின் எட்டு நியாயத்தீர்ப்புகள்
  - தமஸ்குவின் மீது நியாயத்தீர்ப்பு (1:3-5 வசனங்கள்)
  - பெலிஸ்தியா மீது நியாயத்தீர்ப்பு (1:6-8 வசனங்கள்)
  - தீரு மீது நியாயத்தீர்ப்பு (1:9,10 வசனங்கள்)
  - ஏதோம் மீது நியாயத்தீர்ப்பு (1:11,12 வசனங்கள்)
  - அம்மோன் மீது நியாயத்தீர்ப்பு (1:13-15 வசனங்கள்)
  - மோவாப் மீது நியாயத்தீர்ப்பு (2:1-3 வசனங்கள்)
  - யூதாவின் மீது நியாயத்தீர்ப்பு (2:4,5 வசனங்கள்)
  - இஸ்ரவேலின் மீது நியாயத்தீர்ப்பு (2:6-16 வசனங்கள்)
- ஆமோஸின் பிரசங்கங்கள்
  - இஸ்ரவேலின் நியாயத்தீர்ப்பு (3ம் அதிகாரம்)
  - இஸ்ரவேலரின் சீரழிவு (4ம் அதிகாரம்)
  - இஸ்ரவேலரைக் குறித்த புலம்பல் (5,6 அதிகாரங்கள்)
- ஆமோஸின் ஐந்து தரிசனங்கள்
  - விழுங்கும் வெட்டுக்கிளிகளின் தரிசனம் (7:1-3 வசனங்கள்)
  - அக்கினியின் தரிசனம் (7:4-6 வசனங்கள்)
  - தூக்கு நூல் தரிசனம் (7:7-9 வசனங்கள்)

வரலாற்றுப்பகுதி: பெத்தேலிலுள்ள ஆசாரியர்களின் எதிர்ப்பு (7:10-17 வசனங்கள்)
பழக்கூடையின் தரிசனம் (8ம் அதிகாரம்)
ஆண்டவரின் நியாயத்தீர்ப்பின் தரிசனம் (9:1-10 வசனங்கள்)

- இஸ்ரவேலர் மீட்கப்பட வாக்குத்தத்தங்கள் (9:11-15 வசனங்கள்)

### ஆமோஸில் கிறிஸ்து

இந்தப் புத்தகத்தில் கிறிஸ்துவை விழுந்துப் போன கூடாரத்தை (9:11) கட்டுபவராகவும், தமது ஜனங்களை தேசத்தில் திரும்ப நாட்டுபவராகவும் (9:11-15) ஆமோஸ் சித்தரிக்கிறார். இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படும் என்றும், விழுந்துப் போன தாவீதின் கூடாரம் மீண்டும் நிலைநிறுத்தப்படும் என்றும், தேவன் கொடுக்கிற நம்பிக்கையின் வார்த்தையோடு கூட ஆமோஸ் தன்னுடைய புத்தகத்தை நிறைவு செய்கிறார்.

ஆமோஸ் ஏசாயாவைப் போல இராஜ வம்சத்தில் பிறந்தவர் அல்ல. எரேமியாவைப் போல ஆசாரிய குடும்பத்தில் பிறந்தவரும் அல்ல. ஏழை மேய்ப்பனாக இருந்தாலும் தேவன் தனக்குக் கொடுத்த வார்த்தைகளை ஜனங்களுக்கும், அரசவைக்கும் தைரியமாய் சொல்வதற்கு கொஞ்சமும் தயங்கவில்லை. எந்த நிலையில் இருக்கும் மனிதனையும் தேவன் பயன்படுத்த முடியும் என்பதற்கு ஆமோஸ் நமக்கு ஒரு சாட்சி.

# விட்டுக்கொடு...

நான் ஒரு SALES COMPANYயில் ACCOUNTS DEPARTMENTல் பணிபுரிகிறேன். என்னுடைய வேலையில் நான் மிகவும் கவனமாகவும், உண்மையாகவும் இருப்பதால், என்னுடைய முதலாளி எனக்கு பதவி உயர்வு கொடுத்து CASHIERஆக பணிபுரிகிறேன். ஒரு பக்கம் வேலையில் உண்மையாக இருந்தாலும், மறுபக்கம் தேவனை குறித்த பயமும், தேவன் மேல் அன்பு இருப்பதால், வேலையில் உத்தமமாகவும், ஞாயிற்றுக் கிழமைகளில் கிராம ஊழியமும் செய்து வருகிறேன். தற்பொழுது என்னோடு வேலை செய்யும் பெண்ணை திருமணம் செய்ய முடிவு எடுத்தேன். ஆனால் என் பெற்றோரும், என்னை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தின சகோதரரும் இந்த திருமணத்திற்கு தடை சொல்கிறார்கள். காரணம் அந்த பெண்ணிற்கு என்னை விட இரண்டு வயது அதிகம். எனவே எனக்கு ரொம்ப சோர்வாக உள்ளது. வயதை காரணம் வைத்து ஏன் திருமணத்திற்கு தடை சொல்ல வேண்டும்? என்னால் இந்த காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனால் வீட்டில் அனுதினமும் குழப்பமும், பிரச்சனையும் நிலவி வருகிறது. என்னுடைய ஞாயிற்றுக்கிழமை கிராம ஊழியமும் தடைபட்டு விட்டது. வேலையிலும் கவனம் குறைகிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை. உண்மையாக இருக்கிற எனக்கு ஏன் இப்படி நடக்கிறது? பலர் மனம் போல வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தடையும் இல்லை. ஆனால் தேவனுக்காக உண்மையாக இருக்க வேண்டும். ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று நினைக்கிற என் வாழ்க்கையில் ஏன் இத்தனை தடை?

– சுதாகர், சுரண்டை

ஆலோசனை: அவி






அன்பு சகோதரர் சுதாகர்! வேலையில் உங்களின் உண்மையையும் உத்தமத்தையும் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. மேலும் உங்களின் உண்மை மற்றும் கடின உழைப்பால் முன்னேறி கொண்டிருப்பதும் மகிழ்ச்சி அளிக்கின்றது. பல வாலிபர்கள் தங்கள் வேலைகளில் கவனம் வைத்து முன்னேறிக் கொண்டே போக வேண்டும் என்று யோசிக்கிற இந்த சூழலில், ஞாயிற்றுக் கிழமைகளில் தேவனுக்காக பகுதி நேரம் ஊழியம் செய்வது மிகவும் சிறந்த ஒரு செயல். இதன் மூலம் தேவன் மேல் உங்களுக்கு இருக்கும் அன்பும் அர்ப்பணிப்பும் புரிகிறது.

அதே நேரம் இந்த திருமண காரியத்தில் உங்களுடைய முடிவுக்கு ஏன் எல்லோரும் தடையாக இருக்கிறார்கள் ஏன் வயதுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்? என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். திருமணத்தில் மணமகனைவிட மணமகள் வயது குறைந்தவர்களாக இருக்க வேண்டும். ஆண்களுக்கு இரண்டு அல்லது மூன்று வயது அதிகமாக இருக்க வேண்டும் என்பது நம் சமுதாயத்தின் நியதி, அதற்கு காரணம், அப்பொழுது, தான் ஆண்கள் சீராக குடும்பத்தை நடத்த முடியும். இரண்டு பேருக்கு

சரிசமமான வயது இருந்தாலோ அல்லது மனைவியை விட கணவன் குறைந்த வயதுள்ளவராய் இருந்தாலோ நிறைய கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே தான் பெண்களுக்கு வயது குறைவாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்பொழுது தான் பெண்களால் தன் கணவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். வயது அதிகமாக இருக்கும் போது, கணவனைவிட எனக்கு அனுபவமும், அறிவும் அதிகம் என்ற உணர்வு உண்டாகும். அது குடும்பத்திற்குள் ஒருமனம் அற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும். மேலும் கீழ்ப்படிதல், அடிபணிவது (Submissive) போன்ற காரியங்களுக்கு பெரும் தடையாக இருக்கும்.



இன்றைய கலாச்சாரமும், சூழ்நிலையும் இந்த வயது வரம்பை எண்ணுவதில்லை. நாங்கள் சரிசமம், Modern thinking, புதுக் கலாச்சாரம் போன்ற பல காரியங்களை பேசுவார்கள். ஆனால் நடைமுறைக்கு அது சற்றும் ஒத்துவராது. குடும்பத்தில் அன்பும், சமாதானமும் மறைந்து வாக்குவாதமும், நான் பெரியவனா, நீ பெரியவளா? நான் சொல்வது தான் சரி, நீ சொல்வது தவறு என்ற வார்த்தைகளும், எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

**ஒருவேளை இந்த வயது வித்தியாசத்திற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்காமல், அப்பெண்ணை திருமணம் செய்வதால் உண்டாகும் விளைவுகள்...**

- பெற்றோரின் ஆசீர்வாதமும், அன்பும் கிடைக்காமல் போக வாய்ப்பு உண்டு.
- உங்கள் ஆவிக்குரிய சகோதரரின் உறவு முறிவதால், உங்கள் கிராம ஊழியம் தடைபடவும், தேவனோடு உள்ள உறவும் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு.
- இன்றைக்கு உங்களுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கும் பெண், எதிர்காலத்தில் உங்களுக்கு கீழ்ப்படியாமல், உங்கள் மனம் நோகும்படி பேசவோ, நடக்கவோ வாய்ப்பு உண்டு.
- உங்களை விட உங்கள் மனைவி வயது முதிர்ந்தவர்கள் என்பதால், அவர்களின் கருத்தும், அவர்களின் முதிர்ச்சியான ஆலோசனை தான் சரி என்று உங்களோடு வாக்குவாதம் செய்ய வாய்ப்பு உண்டு.
- இந்த விரிசல் நாளடைவில் அதிகமாகி, உங்கள் மனதுக்கு பிடித்த அவர்கள், உங்களை விட்டு பிரிந்து போக வாய்ப்பு உண்டு.
- இந்த பிரிவினால், ஒரு பெரிய சோர்வு உண்டாகி, உங்கள் வேலையில் கவனம் குறையவும், அதனால் உங்கள் வேலையில் பாதிப்பும், ஏன் வேலை போகவும் வாய்ப்பு உண்டு.

**ஒருவேளை நீங்கள் இந்த வயதிற்கு முக்கியத்துவம் கொடுத்து, வேண்டாம் என்று சொல்வதால் ஏற்படும் நன்மைகள்...**

- ✔ உங்கள் மனதுக்கு பிடித்தப் பெண்ணை மணக்காததால், வேதனையும், துக்கமும் சில நாட்கள் உங்களை பாதிக்க வாய்ப்பு உண்டு.
- ✔ ஆனால் தேவன் விரும்புகிற திருமண வாழ்விற்கு உங்களை நீங்கள் ஒப்புக்கொடுத்ததால், தேவன் உங்களுக்கு அவர் விரும்புகிற ஒரு மகளை கொடுக்க வாய்ப்பு உண்டு.
- ✔ திருமண வாழ்வு, சீராக செல்வதால், வேலையில் கவனமும், ஊழியத்தில் தீவிரமும் இருக்க வாய்ப்பு உண்டு.
- ✔ உங்களின் பெற்றோருக்கு கீழ்ப்படிந்ததால் அவர்களுக்கு சந்தோஷமும், மகிழ்ச்சியும் உண்டாக வாய்ப்பு உண்டு.
- ✔ தேவன் விரும்பும் இயேசுவின் குடும்பத்தை கட்டுகிறோம் என்ற சந்தோஷம் உண்டாக வாய்ப்பு உண்டு.

**எனவே சுதாகர், சற்று யோசித்து செயல்படுங்கள்! உங்களின் தெளிவான முடிவு, உங்களின் முழு வாழ்க்கைக்கு பொறுப்பு. எந்த தீர்மானத்தையும் மாற்றி அமைக்கும் வாய்ப்பு நம் கையில் தான் இருக்கிறது. ஆனால் திருமணம் என்று முடிவு எடுத்த பிறகு, அதை மாற்ற முடியாது. எனவே சிந்தித்து, ஜெபித்து செயல்படுங்கள்! ●**



முகப்பு செய்தி: சதீஷ்

**2019ஆம் ஆண்டு** உலகக்கோப்பை அரை இறுதிப் போட்டியை இந்தியர்களால் அவ்வளவு எளிதில் மறந்து விட முடியாது. 240 ரன் இலக்கை நோக்கி தன்னுடைய ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணிக்கு ஆரம்பத்திலேயே பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. இந்திய அணி 5 ரன்னுக்கு 3 விக்கெட்டை இழந்து, இந்தியர்களின் உலகக்கோப்பை கனவை உடைத்து விடும் சூழ்நிலையை உருவாக்கியது. தொடர்ந்து விக்கெட்டுகள் விழ (92-6), இருந்த கொஞ்சம் நம்பிக்கையும் போனது. 7வது விக்கெட்டுக்கு தோனியும், ரவீந்திர ஜடேஜாவும் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்தின போது நம்பிக்கை இழந்துப் போன இந்திய கிரிக்கெட்டின் ரசிகர்கள் எப்படியும் தோனி இந்த முறையும் இந்தியாவுக்கு உலகக் கோப்பையைப் பெற்று தந்திடுவார் என்ற கனவுடன் இருந்தனர். பலமுறை இந்திய அணியை வெற்றியின் விளிம்புக்கு கொண்டு சென்றவர் நம்முடைய M.S. தோனி என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. 216 ரன்னில் டோனி அவுட் ஆன போது ரசிகர்களின் உலகக்கோப்பைக் கனவு உடைந்து விட்டது.





கால்பந்து ஆட்டத்தில் சிறந்த வீரராக வர வேண்டும் என்ற பெரும் கனவுடன் இருந்த தோனி பள்ளிப் பருவத்தில் தன்னுடையப் பள்ளியின் கால் பந்தாட்ட அணியில் கோல் கீப்பராக சிறந்து விளங்கினார். மாவட்ட அளவிலான கால்பந்துப் போட்டியிலும் தன்னுடைய திறனான கோல் கீப்பிங்கால் அனைவரின் பார்வையும் தன் மீது படும்படி செய்தார். இவரை நன்கு கவனித்துக் கொண்டிருந்த இவருடைய கால்பந்தாட்ட பயிற்சியாளர், ''நீ கிரிக்கெட்டில் விக்கெட் கீப்பராக போனால் உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கும்'' என்று ஆலோசனை கூறினார். கால் பந்தாட்ட உலகில் சிறந்து விளங்க வேண்டும் என்ற பெரும் கனவுடன் இருந்த தோனி, தன்னுடைய பயிற்சியாளரின் ஆலோசனைக்கு ஏற்ப கிரிக்கெட்டில் விக்கெட் கீப்பராக மாற தோனி தன்னை வளைந்து கொடுக்க ஆரம்பித்தார். 1998ஆம் ஆண்டு பீஹார் மாநில கிரிக்கெட் அணியில் சேர்க்கப்பட்டார். 2004ஆம் ஆண்டிலிருந்து இந்திய கிரிக்கெட் அணிக்காக விளையாட ஆரம்பித்தார். இந்திய கிரிக்கெட் அணியை சர்வ தேச அளவில் கொண்டு சென்று இந்தியாவிற்கு பெரும் வெற்றிகளை தந்ததில் தோனியின் பங்கு மிகவும் முக்கியமானது, 2004-2019ஆம் ஆண்டு வரை சர்வ தேச கிரிக்கெட்டில் சிறந்த வீரனாக விளையாடி அனைவரின் உள்ளத்தையும் கவர்ந்தார். இதுமட்டுமல்லாமல் 2008- 2009ஆம் ஆண்டிற்கான ICC ஒரு நாள் சர்வதேச

போட்டி விருதை இரண்டு முறை பெற்ற முதல் இந்திய விளையாட்டு வீரர் இவர் மட்டுமே ஆவார். இதுமட்டுமன்றி ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது, பத்ம ஸ்ரீ மற்றும் பத்ம பூசன் விருதுகளையும் பெற்றுள்ளார். தோனிக்கு கால்பந்து உலகில் சிறந்த கோல் கீப்பராக வர வேண்டும் என்ற கனவு இருந்த போதும், தன்னுடைய பயிற்சியாளரின் ஆலோசனைக்கு ஏற்ப தன்னை வனைந்து விட்டுக் கொடுத்ததால் தான் இத்தகைய உயர்வைப் பெற முடிந்தது.











உலகத்திலிருக்கும் ஒரு மனிதன் கொடுக்கும் ஆலோசனைக்கு தன்னை வனைந்து கொடுத்தாலே இவ்வளவு பெரிய உயர்வு வருமானால், உங்களைப் படைத்த ஆண்டவரின் ஆலோசனைக்கு ஏற்ப நீங்கள் உங்கள் வாழ்க்கையை வனைந்து கொடுக்கும்போது, அவரால் நீங்கள் உருவாக்கப்பட்டு அனைவருக்கும் பிரயோஜனமுள்ளவராக மாற முடியும். தோனியைப் போல, பெரும் கனவுகளோடு இருக்கும் நீங்கள் உங்கள் கனவை அடைய முடியாமல் போராடிக் கொண்டு இருக்கலாம், இல்லை உங்கள் உள்ளம் உடைக்கப்பட்டு சோர்ந்து போய் இருக்கலாம், எதுவாக இருந்தாலும் உங்கள் வாழ்க்கையை அவரிடம் கொடுங்கள், அவர் உங்களை உருவாக்குவார். பாவத்தில் விழுந்துப் போன என் வாழ்க்கை மீண்டும் துளிர் விடுமா? கெட்டுப்போன வாழ்க்கை மீண்டும் கட்டப்படுமா? என்று யோசித்துக் கலங்கிக் கொண்டு இருக்கிறீர்களா?

குயவன் எப்படி கெட்டுப் போன மண்ணை தூக்கி எறியாமல், தன் கையில் எடுத்து மீண்டும் அதை வனைந்து பிரயோஜனமுள்ள பாத்திரமாக மாற்றி விடுகிறாரோ! அதுபோலவே உடைந்துப் போன உங்கள் வாழ்க்கையை மீண்டும் துளிர்விட செய்ய ஆண்டவரால் முடியும். தாவீது தன்னுடைய வாழ்க்கையில் பாவம் செய்ய இடங்கொடுத்து தன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்ட போது, ஆண்டவர் தாவீதை அப்படியே கெட்டுப் போகும்படி விட்டுவிடவில்லை. கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பி அவன் தவறுகளை சுட்டிக் காண்பித்த போது தாவீது தன் தவறை உணர்ந்து, ''...தாவீது நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான்...'' (2 சாமு. 12:13). தாவீது தன் தவறை உணர்ந்தபடியால், கெட்டுப்போன அவனுடைய வாழ்க்கையை ஆண்டவர் மீண்டும் கட்டி எழுப்புகிறார். நீங்களும் கடந்த கால பாவ வாழ்க்கையை நினைத்து கலங்காமல், தாவீதைப் போல உங்களுடைய தவறுகளை உணர்ந்து ஆண்டவரிடத்தில் உங்களை உருவாக்க விட்டுக் கொடுக்கும் போது, அவரால் உங்களை மீண்டும் கட்டி எழுப்ப முடியும்.

**எனக்கன்பான வாலிபர்களே! நீங்கள் உங்களுக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அதை நோக்கி ஓடாமலும், கெட்டுப்போன உங்கள் வாழ்க்கையை நினைத்து கலங்காமலும், களிமண் தன்னை குயவன் கையில் எப்படி தன்னை வனைய விட்டுக் கொடுக்கிறதோ, அதுபோலவே நீங்களும் உங்களை ஆண்டவரின் கையில் அவர் விருப்பப்படி வனைய ஒப்புக்கொடுக்கும்போது, அவர் உங்களை பிரயோஜனமுள்ள பாத்திரமாகவும், கனத்துக்குரிய பாத்திரமாகவும் வனைந்து உபயோகப்படுத்துவார்!!** ●



# தேவனுக்கு பிரியமானது

"உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்,..." (சங்கீதம் 143:10).



செய்தி: மோகன் சி. லாசரஸ்

அநேக நேரங்களில் நமக்கு பிரியமானதைக் கர்த்தரிடத்தில் கேட்கிறோம். நமக்கு பிரியமானது இன்னதென்று பார்த்து நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுத்து கர்த்தர் நிறைவேற்றுகிறார். ஆனால் தாவீது கர்த்தாவே, உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்கு போதியும், நான் உமக்கு பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் என்று ஒரு அழகான ஜெபத்தை ஏறெடுக்கிறார்.

நான் இந்த யுத்தத்தை செய்யலாமா? நான் யுத்தத்திற்கு போகலாமா? நான் இந்த காரியத்தை செய்யலாமா? என்று கேட்டு, கேட்டு கர்த்தருடைய சித்தத்தையும் விருப்பத்தையும் அறிந்து செயல்படுகிறதை தாவீதின் வாழ்க்கையில் பார்க்கிறோம். அதனால் தான் தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன் (அப். 13:22) என்று ஆண்டவர் சொல்கிறார். அவருக்குப் பிரியமானதைச் செய்வதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கும் 4 காரியங்களை நாம் பார்க்கப் போகிறோம்.

## ஆண்டவருக்கு மிகவும் பிரியமானவை!

### விசுவாசம்

''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்''



(எபி. 11:6). விசுவாசம் தேவனுக்குப் பிரியமானது, விசுவாசம் தேவனை சந்தோஷப்படுத்தக்கூடியது. மத்தேயு 8ம் அதிகாரத்தை வாசிக்கும்போது, என் வேலைக்காரன் திமிர்வாதமாய் கிடந்து, கொடிய வேதனைப்படுகிறான் என்று நூற்றுக்கு அதிபதி விண்ணப்பம் செய்கிறான். அதற்கு இயேசு, நான் வந்து அவனை குணமாக்குவேன் என்று சொல்கிறார். இல்லை ஆண்டவரே நீர் என் வீட்டிற்கு வர வேண்டாம், இங்கிருந்து ஒரு வார்த்தை சொல்லும், என் வேலைக்காரன் சுகமாகிவிடுவான் என்று சொன்னான். இந்த புறஜாதி மனுஷன், இங்கிருந்து ஒரு வார்த்தை சொன்னால் வீட்டில் இருக்கிற வேலைக்காரன் சுகமாவான் என்று சொல்கிறான், இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லையே என்று அவனுடைய விசுவாசம் இயேசுவையே ஆச்சரியப்பட வைத்தது. அப்படிப்பட்டதான விசுவாசம் உங்களுக்குள் இருக்கிறதா?

## மற்றவர்களுக்காக ஜெபிப்பது

''...எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங் களையும் பண்ணவேண்டும்'' (1 தீமோ. 2:1) அது மாத்திரமல்ல, தேசத்தில் அமைதி, சமாதானம், நல்லொழுக்கம் காணப்படும்படி அதிகாரத்திலுள்ளவர் களுக்காக ஜெபிக்க வேண்டுமென்று வேதம் சொல்கிறது. இது தேவனுக்கு பிரியமான ஒரு காரியம். ''நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு (வாழ்க்கை வாழும்படிக்கு), இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்'' (1 தீமோ. 2:2). எத்தனை பேர் தினந்தோறும் முதலமைச்சருக்காக, பிரதமருக்காக ஜெபம் செய்கிறீர்கள். கலெக்டர், தாசில்தாரர், S.Pக்காக, நீதித்துறையில் இருக்கிற நீதிபதிகளுக்காக எத்தனை பேர் நாம் தினமும் ஜெபிக்கிறோம். என் வேலை, தொழில், குடும்பம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று 99% சுயநலமான ஜெபம் தான் செய்கிறோம்.



உங்களோடு படிக்கிற எல்லாருக்காகவும் ஜெபிக்கிறீர்களா? உங்களோடு வேலைப்பார்க்கிறவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறீர்களா? உங்கள் தெருவில் இருக்கிற எல்லாருக்காகவும் ஜெபிக்கிறீர்களா? உங்கள் மாவட்டத்தில் இருக்கிற எல்லாருக்காகவும் ஜெபிக்கிறீர்களா? எல்லாருக்காகவும் ஜெபியுங்கள் என்று கர்த்தர் சொல்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபிக்க தவறி போனதால் தான் இன்னும் இரட்சிப்பு தடைபட்டுக் கொண்டிருக்கிறது. இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவரும் இந்த வசனத்தின்படி தினமும் ஜெபிக்கும் போது, பெரிய மாற்றம் வரும். தேவனுக்கு விருப்பமான காரியத்தை செய்ய நாம் தவறி விட்டோம். நீங்களும் நானும் தேவன் விரும்பாத காரியத்தை செய்ததினால் தான் இன்றைக்கு இவ்வளவு பெரிய பாதிப்பை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

## உற்சாகமாய் கொடுப்பது

''அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்'' (2 கொரி. 9:7). இயேசு தேவாலயத்திற்கு போனபோது, காணிக்கைப் பெட்டி அருகில் உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் போடுகிறதை கவனித்துக் கொண்டிருந்தார். நிறைய பேர் பெருமைக்காக காணிக்கையை அள்ளி அள்ளிப் போடுகிறார்கள். ஒரு ஏழை விதவை வந்து இரண்டு துட்டுக்கு சமமான ஒரு காசைப் போடுகிறாள். இயேசு தன்னுடைய சீஷர்களை அழைத்து, அந்த ஏழை விதவை எல்லாரைக் காட்டிலும் அதிகமாக காணிக்கைப் போட்டாள் என்று அவர்களிடம் சொன்னார். எப்படி ஆண்டவரே என்று கேட்கும் போது, எல்லாரும் தங்கள் பரிபூரணத்தில் இருந்து எடுத்து கொஞ்சத்தைப் போட்டார்கள். பத்தாயிரம் ரூபாய் வைத்துக் கொண்டு, ஒரு பத்து ரூபாய் காணிக்கைப் போட்டார்கள். ஆனால் இந்த ஏழை விதவையினிடத்தில் இரண்டு காசு தான் இருந்தது,

அதற்கு மேல் அவளிடம் ஒன்றுமே இல்லை. எல்லாவற்றையும் போட்டு விட்டாள். தன்னை வாழ வைத்து, தன்னை இதுவரைக்கும் பாதுகாத்து நடத்தின என் ஆண்டவர்மீது உள்ள அன்பினால் அவள் காணிக்கைக் கொடுத்தாள். கடமைக்காக அல்ல, பேருக்காக அல்ல, கர்த்தர் மேலுள்ள அன்பினால் கொடுத்தாள். நாம் எப்படி ஆண்டவருக்கு காணிக்கை கொடுக்கிறோம்? தேவன் பேரில் உள்ள அன்பினால் கொடுக்கிறோமா? அல்லது கடமைக்காக கொடுக்கிறோமா என்பதை கர்த்தர் பார்க்கிறார். நாம் கொடுக்கிறதை வைத்து தான் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.



## நன்மை செய்வது

''அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்'' (எபி. 13:16). இயேசு நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார். தேவையிலுள்ள மக்களுக்கு உதவி செய்தார். இயேசுவை பின்பற்றிக்கூடிய நாமும் நன்மை செய்கிறவர்களாகவும், தான தர்மம் செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.



பரிசுத்த வேதாகமத்தில் கொர்நேலியு என்னும் ஒரு மனுஷனைப் பற்றி அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ''அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்'' (அப். 10:2) என்று எழுதியிருக்கிறது. ஆனால் கொர்நேலியு இன்னும் இரட்சிக்கப்படவில்லை. தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதாக மட்டும் அறிந்திருந்தார். அந்த தேவ பயத்தோடு தன் வீட்டாரனைவரையும் நடக்க வைத்து, எப்பொழுதும் ஜெபம் செய்து கொண்டே இருந்து, மிகுந்த தானதர்மங்களை செய்து கொண்டிருந்தார். செசரியா பட்டணத்திலிருந்து ஒரு ஜெபம் பரலோகத்திற்கு வந்து எட்டுகிறது. தானதர்மங்கள் செய்வது பரலோகத்திற்கு வருகிறதை தேவன் பார்க்கிறார். அவன் இயேசுவை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. அவன் இரட்சிக்கப்பட வேண்டும், அபிஷேகம் பெற வேண்டும் என்று தூதனை அனுப்புகிறார். கொர்நேலியு, ''அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன, என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது'' (அப். 10:4) என்றான்.

பரலோகத்திற்கு இரண்டு காரியம் போகிறது. ஒன்று, நீங்கள் ஜெபிக்கும் ஜெபம். அந்த ஜெபம் சுத்தமான இருதயத்திலிருந்து புறப்படுகிற ஜெபமாக இருக்க வேண்டும். வசனத்தின்படி நாம் ஜெபிக்கிற ஜெபமாக இருக்க வேண்டும். இரண்டாவது, தானதர்மங்கள் செய்ய வேண்டும். ஒரு விதவைக்கு, ஏழை பிள்ளைக்கு, சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட ஒரு நபருக்கு கரத்தை நீட்டி உதவி செய்யும் போது, பரலோகத்தில் தேவனுக்கு முன்பாக அது நினைப்பூட்டுதலாக வருகிறது.

**அன்பான வாலிபர்களே! தாவீதைப் போல தேவனுக்கு பிரியமானதை செய்ய ஒவ்வொருநாளும் ஜெபித்து செயல்படும் போது எல்லாவற்றிலும் வெற்றியைக் காண முடியும். தாவீது எல்லாவற்றையும் கேட்டுக் கேட்டு செய்ததினால் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன் என்று ஆண்டவரே சாட்சி கொடுக்கிறார். இன்றைக்கு உங்களைப் பார்த்து எனக்குப் பிரியமான மகன், எனக்குப் பிரியமான மகள் என்று சாட்சிக் கொடுக்க முடியுமா? கர்த்தருக்குப் பிரியமானதை செய்து பாருங்கள்! உங்களைக் குறித்து இயேசுவால் சாட்சி கொடுக்க முடியும்! ●**



### இந்தியர்களின் மாத மொபைல் டேட்டா எவ்வளவு தெரியுமா?

இந்தியாவில் 5 ஆண்டுகளுக்கு முன்பு மொபைல் பிராட்பேண்ட் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 345 மில்லியனாக இருந்த சூழலில், இப்போது அது 765 மில்லியனாக அதிகரித்துள்ளது. அதாவது அப்படியே இரட்டிப்பாகியுள்ளது.

4ஜி மொபைல் சேவை பயன்பாட்டின் அளவு 31 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது இந்த ஆண்டில் 40 மில்லியன் வாடிக்கையாளர்கள் 4ஜி சேவையில் இணைந்துள்ளனர்.



# வனைய ஒப்புக்கொடு...

சிறப்புக் கட்டுரை: ரவி

என் அன்புக்குரிய சகோதர, சகோதரிகளே! தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் நீங்கள் எப்போதாவது, என் வாழ்வில் என்ன நடக்கிறது? நான் ஏன் இப்படி வாழ்கிறேன்? ஏன் அவ்வப்போது பாவத்தில் விழுகிறேன்? என் ஜெபத்திற்கு ஏன் தேவன் பதில் கொடுப்பதில்லை? என்பது போன்ற இன்னும் பல்வேறு கேள்விகளைக் உங்களிடமே நீங்கள் கேட்டதுண்டா? நான் பலமுறை என் உள்ளத்தில் இப்படியான கேள்விகளைக் கேட்டிருக்கிறேன். ஆம் நண்பர்களே, நம்முடைய வாழ்வில் தானாகவே உருவாகும் சில சூழ்நிலைகள் உண்டு. மற்றவர்களின் முடிவுகளால் உருவாகும் சூழ்நிலைகள் உண்டு. இன்னும் குறிப்பாக, நாம்தானே மாம்சத்தின் இச்சைகளால் இழுக்கப்பட்டு எடுக்கும் முடிவுகளால் ஏற்படும் சூழ்நிலைகளும் உண்டு. இப்படியான சூழ்நிலைகளை நாம் சந்திக்கும்போது, மேற்கூறியதான கேள்விகளும் நமக்குள் எழுவதுண்டு. சில நேரம் கர்த்தர் என் பட்சத்தில் என்னோடு இருக்கிறாரா என்று கூட சந்தேகப்படும் அளவிற்கு அச்சூழ்நிலைகள் நம்மைத் தள்ளிவிடுவதுமுண்டு.

இப்படியான கடினமான பாதையில் நாம் செல்லும்போது, தேவன் நம்மில் என்ன செய்கிறார் என்பதை வேதத்தின் சில எடுத்துக்காட்டுகளோடு பார்க்கலாம். ‘‘குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்’’ (எரேமியா 18:4) என்று சொல்கிறது. குயவன் என்பது தேவனைக் குறிக்கிறது. மண்பாண்டம் என்பது நம்மைக் குறிக்கிறது. மண்பாண்டம் குயவன் கையில் கெட்டு போனது என்று வசனம் சொல்கிறது. ஆம், பல நேரங்களில் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் சுதந்திரத்தை, நாம் நம்முடைய மாம்ச இச்சைகளை நிறைவேற்றுவதற்காகவே பயன்படுத்துகிறோம். அவ்வாறு நிறைவேற்றும்போது, சில சங்கடமான சூழலை நாமே நமக்கு ஏற்படுத்திக் கொள்கிறோம். பின்பு நாம் தேவனை நோக்கிக் கேள்விகளை எழுப்ப தொடங்குவோம். நாம் எடுக்கும் தவறானத் தீர்மானங்கள் ஒருபுறம் இருக்க, மற்றவர்கள் மூலமும் சில நேரம் நாம் சங்கடமான சூழல்களில் போக நேரிடும். உதாரணமாக வேதத்தில், யோசேப்பு தன் சகோதரர்களின் துர்ஆலோசனையின் நிமித்தம் ஏராளமான பாடுகளை அனுபவிக்க வேண்டியதாக இருந்தது.

**என் அன்பு வாலிபர்களே, ஒருவேளை நீங்கள் எடுத்த தவறான முடிவுகளால் தற்போது நீங்கள் வாழ்வில் அவதிப்படுகிறீர்களென்றால், மனந்திரும்பி உங்களைத் தாழ்த்தி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அண்டையில் வாருங்கள். அவர் தன்னிடம் வரும் ஒருவரையும் புறம்பேத் தள்ளுவதில்லை. உங்கள் சூழ்நிலைகள் மூலம் தேவன் உங்களை வனைகிறார். சில நேரங்களில், அவர் நமக்குள் கிரியை செய்வதை நாம் உணராமல் இருக்கலாம். ஆனால் தீர்க்கமாக பிடித்துக் கொள்வீர்களேயானால், எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்;... தேவனோ, அதை நன்மையாக முடியப்பண்ணினார்.” (ஆதி. 50:20) என்று யோசேப்பு தன் சகோதரர்களைப் பார்த்து சொன்னதுபோல, நாமும் சொல்ல முடியும்.**



**“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” (ரோமர் 8:28) என்று வேதம் சொல்கிறது. அவருடைய சித்தத்திற்கு நம்மை விட்டுக் கொடுக்கும் பொழுது நாம் அவரில் அன்புகூரும்போது, நாம் எத்தகைய கடினமான சூழ்நிலைகளில் போனாலும், அவைகளின் மூலமாக நம்மை கனமும், மகிமைக்கேதுவான நல்ல பாத்திரமாக அவர் வனைகிறார் என்பதை ஆழமாக நினைவில் வைத்து, அவரை விசுவாசித்து முன்னேறிச் செல்லுங்கள். கர்த்தர் உங்களை அவருக்கு உகந்த பாத்திரமாக வனைந்து பயன்படுத்துவார்! ●**




சாதனை: சுமா

# வெற்றி நடை...

Hello Friends! உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள். பரப்பரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த உலகில், நீங்களும் வெற்றி தடம் பதிக்க பரப்பரப்பாக உங்களை தயார்ப்படுத்தி வருகிறீர்கள். இன்னும் வேகமாக வெற்றி நடை போட இந்தச் சாதனையாளரின் வாழ்க்கை உங்களுக்கு பெரும் உற்சாகத்தை தரும் என நம்புகின்றேன். அந்த வெற்றியாளரின் வாழ்க்கை இதோ உங்கள் முன்!!!

அமெரிக்காவில் உள்ள ஒரு விளையாட்டு வீரர், விளையாட்டு வீரர்கள் உபயோகப்படுத்தும் பொருட்களை வைத்து சொந்தமாக தொழில் தொடங்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார். அப்பொழுது ஜப்பானிய கம்பெனி ஒன்றின் விளையாட்டு காலணிகளை இறக்குமதி செய்து விற்றால் அதிக இலாபம் பெறலாம் என்று அவருடைய எண்ணத்தில் தோன்றியது. இந்த விருப்பத்தை தன் தந்தையிடம் மிக ஆர்வமாகச் சொன்னதும், அவரின் தந்தையும் 50 டாலர்கள் தன் வாலிப மகனிடம் கொடுத்து, இந்தப் பணத்தில் சொந்தமாக தொழில் ஆரம்பித்து, தொழிலில் வெற்றி காணும்போது எனக்கு இந்த 50 டாலரை திருப்பித் தரவேண்டும் என்ற நிபந்தனையோடு அந்தப் பணத்தைக் கொடுத்தார். அதை சந்தோஷமாக அந்த வாலிபனும் வாங்கிக் கொண்டார்.

ஒரு பக்கத்தில் தொழில் தொடங்க வேண்டும் என்ற கனவு, மறு பக்கத்தில் 50 டாலர்கள் வைத்து என்ன செய்வது? எப்படி தொழில் தொடங்குவது? என்று சிந்தித்து, இதற்கான பதிலையும் கண்டடைந்தார். தொழிலில் முதலீடு செய்வது என்று தீர்மானித்து, விளையாட்டில் இந்த வாலிபனுக்கு கோச்சாக இருந்தவரிடம் சென்று தன்னுடைய விருப்பங்களைத் தெரிவித்தார். அவரும் சம்மதம் தெரிவிக்கவே இருவரும் தங்களிடம் இருந்த சேமிப்புகளை கணக்குப் பார்த்தனர். மொத்தம் 500 டாலர் வந்தது. இருவரும் இந்தப் பணத்தை முதலீடு செய்து தொழிலைத் தொடங்கினார்கள். தங்களது திறமையால் குறைந்த முதலீட்டில் தரமான காலணிகளை ஜப்பானில் இருந்து இறக்குமதி



செய்து, விற்பனை செய்யும் கடைகளுக்கு சென்று விற்க முயன்றார்கள். ஆனால் இறக்குமதியான

காலணிகளை எந்த கடையும் வாங்க முன் வரவில்லை. தினமும் கடை கடையாக ஏறி இறங்கினார்கள். கையில் இருந்த பணம் எல்லாம் செலவழிந்து விட்டது. அடுத்து என்ன செய்வது என்று சிந்திக்கும் போதே ஒரு யோசனையும் பிறந்தது, அதை செயல்படுத்தவும் முன் வந்தார். அந்த வாலிபனும் அவரது கோச்சும் அவர்களிடம் இருந்த எல்லா காலணிகளையும் காரில் ஏற்றிக் கொண்டு விளையாட்டு வீரர்கள் அதிகமாக இருக்கும்



விளையாட்டு மைதானத்தை நோக்கி விரைந்தனர். தாங்கள் எடுத்து வந்த விளையாட்டு காலணிகளை எல்லாம் காரின் டிக்கியில் அழகாக அடுக்கி வைத்து விற்பனைக்காக வைத்தார்கள். அந்த இடத்தில், அந்த வாலிபனின் பேச்சுத் திறமையால் அவர்களிடம் இருந்த அனைத்து காலணிகளும் விற்பனையாகி விட்டது. இருவரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

விளையாட்டு மைதானத்தில் விற்பனையான காலணிகளின் இலாபத்தை வைத்து விளையாட்டு காலணிகளுக்கென்று புதுவிதமாக 'ப்ளு ரிப்பன் ஸ்போர்ட்ஸ்' என்ற





கடையை ஆரம்பித்தனர். இவர்கள் நினைத்ததை விட கடை நன்றாக சென்றது. நன்றாக சென்ற கடையில் அநேக பிரச்சனைகள் வர ஆரம்பித்தது. அதனால் இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஒரு முடிவு செய்தனர்.

ஜப்பானில் இருந்து இறக்குமதியான காலணிகளை விற்பனை செய்வதை விட்டு, தாங்களே விளையாட்டு காலணிகளை தயாரிக்க முடிவு செய்தார்கள். எடை குறைந்த மற்றும்



விளையாட்டு வீரர்கள் விரும்பும் அளவில் தாங்களாகவே விளையாட்டு காலணிகளைத் தயாரிக்க ஆரம்பித்தனர். பிறகு தங்களுடைய கடைக்கு Nike என்று பெயரை மாற்றி அமைத்தனர். இந்த Nike நிறுவனம் அனைவராலும் விரும்பும் Sports Material நிறுவனமாக வளர்ந்துள்ளது. இந்த நிறுவனத்தை William Bowerman மற்றும் Philip H. Knight என்பவர்கள் இணைந்து தொடங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெறும் 500 டாலர் முதலீட்டில் தொடங்கிய இந்த நிறுவனம் தற்போது அனைவராலும் வியந்து பார்க்கும் வண்ணம் உயர்ந்துள்ளது. சிறிய முதலீடு, விடாமுயற்சி மற்றும் தோல்வி ஏற்பட்டால் அடுத்து என்ன செய்வது என்று யோசித்து செயல்படுதல், எதற்கும் தளராத மனம் இவை அனைத்துமே Nike மிகப் பெரிய நிறுவனமாக உருவாகக் காரணமாக இருந்தது.






**அன்பான இளம் வெற்றியாளர்களே! நீங்கள் வெற்றி நடை போட வேண்டும் என்றால், முதலில் உங்களுக்கு எதிராக வரும் போராட்டங்களை எதிர்த்து நிற்க வேண்டும், அப்போது தான் நடக்க பெலன் வரும். எதிர் வரும் பிரச்சனைகளை எதிர்த்து நிற்க முடியவில்லை என்றால் வெற்றி நடை போடவே முடியாது. வெற்றி நடை போட வேண்டும் என்றால் கப்பலை போல எதிராக வரும் கடல் நீரைச் கிழித்து சென்றால் தான் கரை சேர முடியும். எனவே பயம், சோர்வு இவை அனைத்தையும் எதிர்த்து நிற்கும் போது, வெற்றி நடை போட்டு செல்லலாம்!** ●

# வனைய ஒப்புக் கொடுத்தவர்கள்!



## எலிசா

ஆண்டவர் எலியாவிடம், உனக்கு பதிலாக ஒரு தீர்க்கதரிசியை உருவாக்கு என்று சொன்னார். எலிசா தன் வேலைக்காரரோடு 12வது ஏரை ஓட்டிக்கொண்டு இருக்கும் போது, எலியா போய் தன் சால்வையை அவன் மேல் போட்டார். எலிசா அதனால் தனக்குக் கிடைத்த அழைப்பை அறிந்து ஜனங்களுக்கு ஒரு விருந்து பண்ணினான். எலிசா ஒரு சாதாரண மனிதன் அல்ல, அநேக நிலங்களை வைத்திருந்த பெரிய செல்வந்தராக இருந்திருக்கக்கூடும். ஊழிய அழைப்பைப் பெற்றவுடன் அப்படியே சென்றுவிடவில்லை. தன் பெற்றோரிடம் அறிவித்து அவர்களுக்கு முத்தம் கொடுத்து, எல்லாவற்றையும் விட்டு தேவன் என்னை நடத்த வல்லவராய் இருக்கிறார் என்பதை அறிந்து அவருக்கு பின் சென்றார். ஊழியத்திற்கு வந்தவுடன் முதலில் எலியாவுக்கு பணிவிடை ஊழியம் தான் செய்தார். எலியாவிடமிருந்து எலிசா ஊழியத்தை கற்றுக் கொள்கிறார். எலியா, எலிசாவை தன்னோடுகூட வைத்திருந்து எலிசா உருவாவதற்கு காரணமாய் இருந்தார். எலியாவுக்கு பின் சென்று வந்த எலிசா, அவருக்குப் பின் இரட்டிப்பான வரங்களைப் பெற்று, எலியா செய்த அற்புதங்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு அற்புதங்களை செய்தார். எலியா ஒவ்வொரு இடமாக செல்லும் போது எலியா, எலிசாவிடம் நீ இங்கேயே இரு என்று கூறும் போது, நான் உம்மை விடுகிறதில்லை என்று பின் தொடர்ந்து வந்த எலிசா, யோர்தானில் வரும் போது, என்னை பின் தொடர்ந்து வருகிறாயே, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கும் போது, உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரண்டு மடங்கு வேண்டும் என்று கூறுகிறார். உன்னை விட்டு தான் எடுத்துக் கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்கு கிடைக்கும், இல்லாவிட்டால் கிடையாது என்று கூறிக் கொண்டு, நடந்து போகையில் அக்கினி ரதமும், அக்கினி குதிரைகளும் இருவரையும் பிரித்து சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எலியா ஏறிப்போனார் (1 இராஜா. 19:17-21; 2 இராஜா. 2:1-18).

**அன்பான வாலிபர்களே! கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு கீழ்ப்படிந்து எலியா, எலிசாவை ஒரு தீர்க்கதரிசியாக உருவாக்கினது மட்டுமல்லாமல், எலியாவை விட எலிசா இரட்டிப்பான அற்புதங்கள் செய்யுமளவிற்கு அவரை வனைவதற்கு ஒப்புக் கொடுத்தார். எலிசாவைப் போல உருவாக வேண்டுமானால், உங்களை அவருடைய சித்தத்தின்படி வனைய ஒப்புக் கொடுப்பீர்களா?**

சிந்தனை சிதறல்: ஜாய் ஜான்

## யோசுவா

மோசேயின் மரணம் நெருங்கி வரும் நேரத்தில், இஸ்ரவேலர்கள் மேய்ப்பன் இல்லாத மந்தையைப் போல இராதபடிக்கு தனக்கு அடுத்து ஒரு தலைவரை உருவாக்க வேண்டுமென்று தேவனிடம் மோசே கேட்டார். அதற்கு தேவன், ஆவியை பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவாவை சபையனைத்திற்கும் முன்பு தலைவனாக நியமிக்கும்படி சொன்னார். இஸ்ரவேலர்கள் எல்லாரும் யோசுவாவுக்கு கீழ்ப்படியும்படி, உன் கனத்தில் அவனுக்கு கொஞ்சம் கொடு என்று தேவன் யோசுவாவுக்காக சிபாரிசு செய்கிறார் (எண். 27:15-20). தலைமை பொறுப்பு ஏற்கும் போது அநேக சவால்களைச் சந்திக்க வேண்டும் என்பதை அறிந்திருந்த மோசே, யோசுவாவிடம் பலங்கொண்டு திடமனதாயிரு, தேவன் உன்னோடு இருப்பார் என்று உற்சாகப்படுத்தினார் (உபா. 31:6-8). கர்த்தர் மோசேயிடம் நீ மலைக்கு ஏறி வந்து அங்கே தரித்திரு, நீ ஜனங்களுக்கு கற்பிப்பதற்கான கற்பனைகளை கொடுப்பேன் என்று சொன்ன போது யோசுவாவையும் அழைத்துச் சென்றார். மோசே மலையின் மேல் ஏறி 40 நாட்கள் இருந்தார். யோசுவாவும் மலைக்கு நடுவில் 40 நாட்கள் இரவும் பகலும் தங்கியிருந்திருக்க வேண்டும். ஏனெனில் மோசே சாட்சி பலகைகளுடன் 40 நாட்கள் கழித்து வரும் போது யோசுவா அங்கே இருந்தார் (யாத். 24:1,2,9-18; 32:15-17). இஸ்ரவேலர் பொன் கன்றுக்குட்டியை செய்து விக்கிரகராதனையில் ஈடுப்பட்ட பிறகு, பாளயத்துக்குப் புறம்பே உள்ள ஆசரிப்புக் கூடாரத்தில் மோசேயுடன், யோசுவா தொடர்ந்து ஊழியம் செய்தார். அங்கு தேவன் முகமுகமாய் மோசேயோடு பேசினார். மோசே பாளயத்திற்கு திரும்பி சென்ற நேரத்திலும் கூட, யோசுவா ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தார். யோசுவா தன் பொறுப்பில் மிகவும் கவனமாக இருந்தார் (யாத். 33:7,11).



**அன்பான வாலிபர்களே! யோசுவா ஒரு தலைவனாக உருவாக எவ்வளவோ தியாகங்களையும், எவ்வளவோ சவால்களையும் சந்தித்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டீர்கள். இயேசுவுக்காக நீங்கள் பயன்படவேண்டுமானால், யோசுவாவைப் போல உங்களை வனைய ஒப்புக் கொடுக்கும் போது, அவருக்கு ஏற்ற பாத்திரமாக வனைந்திடுவார்! அவரின் சித்தப்படி வனைய ஒப்புக் கொடுப்பீர்களா?**

# வனைய ஒப்புக்கொடுக்கத் தவறியவர்கள்!



## லோத்தின் மனைவி

லோத்தும் அவருடைய குடும்பமும் ஆபிரகாமுடன் கானான் தேசத்தில் ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள். ஆபிரகாமிடமும் லோத்துவிடமும் நிறைய கால்நடைகள் சேர்ந்து விட்டதால் இடம் போதவில்லை. ஆகையால் ஆபிரகாம், லோத்துவிடம் நாம் எல்லோரும் இனிமேல் ஒரே இடத்தில் தங்க முடியாது, நீ எந்தப் பக்கம் போக ஆசைப்படுகிறாயோ, அந்த பக்கம் போ, நான் வேறு பக்கம் போகிறேன் என்றார். சோதோம் என்ற நகரம் மிகவும் அழகாக செழிப்பான தேசமாக இருந்ததால் லோத்து தன்னுடைய குடும்பத்தை அழைத்து சென்று அங்கு குடியேறினார். சோதோம் மக்களும் பக்கத்து நகரமான கொமோராவில் வாழ்ந்த மக்களும் மிகவும் பாவிகளாக இருந்தார்கள். அதனால் கர்த்தர் அந்த நகரங்களை அழிக்க முடிவு செய்தார். லோத்தையும் அவரது குடும்பத்தையும் காப்பாற்ற கர்த்தர் நினைத்து, இரண்டு தேவ தூதர்களை அனுப்பி, இந்த ஊரை விட்டு உடனே போங்கள், கர்த்தர் இந்த ஊரை அழிக்கப் போகிறார் என்று சொன்னார்கள். ஆனால் லோத்து உடனே புறப்படாமல் தாமதித்துக் கொண்டிருந்தார். அதனால் அந்தத் தேவ தூதர்கள் லோத்துவின் கையையும் அவருடைய மனைவியின் கையையும் இரண்டு மகள்களின் கையையும் பிடித்து வேக வேகமாக ஊருக்கு வெளியே கொண்டு போய் விட்டு, இங்கிருந்து தப்பித்து ஓடுங்கள், திரும்பிப் பார்க்காதீர்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். லோத்தும் அவருடைய மகள்களும் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சோதோமை விட்டு ஓடினார்கள். லோத்துவின் மனைவி சோதோமை விட்டு பிரிய மனமில்லாமல், சிறிது தூரம் வந்ததும் ஏக்கத்தோடு திரும்பிப் பார்த்தாள். பார்த்த அந்த நேரமே உப்புத்தூண் ஆனாள். லோத்தும் அவருடைய பிள்ளைகளும் தேவன் எதை செய்தாலும் நன்மையானதை செய்வார் என்பதை அறிந்து அவருடைய சித்தத்தின்படி வனைய ஒப்புக்கொடுத்தார்கள். லோத்தின் மனைவி தன்னை வனைய ஒப்புக்கொடுக்காமல் உப்புத்தூண் ஆனாள் (ஆதி. 13:10-13; 19:15-19,30).

**அன்பான வாலிபர்களே! ஆண்டவருடைய விருப்பத்தின்படி வனைய ஒப்புக்கொடுக்கும் போது, அவருக்கு ஏற்ற பாத்திரமாக வனைந்து உபயோகப்படுத்துவார். லோத்தின் மனைவி போல உங்களை வனைய ஒப்புக்கொடுக்காமல் போனால் அவர்களைப்போல யாருக்கும் உபயோகமில்லாத பாத்திரமாக தான் இருக்க முடியும். நீங்கள் உங்களை வனைய ஒப்புக் கொடுப்பீர்களா?**

## ஆரோன்

மோசேயின் சகோதரனாகிய ஆரோனை கர்த்தர் சொல்லும் வார்த்தைகளைப் பேசுவதற்காக அனுப்பட்டார். அப்போது முதல் ஆரோனின் பயணம் மோசேயின் பயணத்தைச் சார்ந்தே இருந்தது. இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டை விட்டு வெளியேறிய போது, அவர்களோடு சென்றவர்களில் ஆரோன் முக்கியமானவர். மோசே மலையின் மேல் ஏறிச் சென்று கர்த்தரோடு நாற்பது நாள் இரவும் பகலும் தங்கியிருந்தார். மலையடிவாரத்தில் தங்கியிருந்த மக்கள் பொறுமை இழந்து, ஆரோனிடம் வந்து மோசேக்கு ஏதோ ஆயிற்று, நீர் எங்களுக்கு ஒரு தெய்வத்தை செய்து கொடும் என்றதும், ஆரோன் அதற்கு உடன்பட்டு அவர்களுடைய பொற்காதணிகளைச் சேகரித்து, ஒரு பொன் கன்றுக்குட்டியைச் செய்து கொடுத்தார். மக்கள் அதையே தங்கள் தெய்வமான கொண்டாடி, ஆடிப்பாடி விருந்துண்டு கேளிக்கைகளில் மூழ்கினார்கள். அந்த இடத்தில் ஆரோன் ஜனங்களை பாவம் செய்ய வைக்கிறார். மோசே கட்டளைகள் அடங்கிய கற்பலகையோடு கீழே வருகையில் நிகழ்ந்தவற்றைக் கண்டு கோபமடைந்தார் (யாத் 32:1-6). மேரிபாவின் தண்ணீரைப் பற்றிய காரியத்தில் மோசேயும், ஆரோனும் கர்த்தருடைய வாக்குக்குக் கீழ்ப்படியாமல் போனபடியால், இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கும் தேசத்தில் ஆரோனால் பிரவேசிக்க முடியாமல் போனது (எண். 20:22-24).

**அன்பான வாலிபர்களே! ஆரோன் கர்த்தரின் பணியை முழுமையாய் செய்ய தன்னை அர்ப்பணித்தவர். ஆனால் மக்கள் தங்களுக்கென ஒரு கடவுள் வேண்டுமென்று கேட்கும்போது, மக்களின் சத்தத்திற்கு செவி கொடுத்தாரேயன்றி, மக்களை நல்வழிப்படுத்த தவறிவிட்டார். நீங்கள் கூட இன்றைக்கு ஆரோனைப்போல கர்த்தரின் கட்டளைக்கு காத்திருக்காமல், உங்களுடைய விருப்பப்படி செய்கிறீர்களா?**






ஊழிய பயணம் வயலா

பகுதி 8

# சபை நிறுவப்படுதலும், பேதுருவின் முதல் பிரசங்கமும்!

பெந்தெகொஸ்தே என்பது 'ஐம்பதாவது நாள்' என்று பொருள் கொண்டதாகும். யூதர்கள் ஆண்டுதோறும் கொண்டாடும் இரண்டாவது பெரிய திருவிழா பெந்தெகொஸ்தே ஆகும். இது ஒரு அறுப்பின் பண்டிகையாகும். தங்கள் நிலத்தின் விளைவின் முதற்பலன்களை ஆண்டவருக்கு படைக்கும் நாள் (லேவி. 23:15,16). இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்னர் இந்த நாள் வந்த அன்று ஆவியானவரின் திருமுழுக்கு முதன்முதலில் அருளப்பட்டது. நிலத்தின் முதற் பலனைப் போல திருச்சபைக்கு பெந்தெகொஸ்தே பண்டிகையானது உலகத்தில் ஆத்துமாக்களைத் தேவனுக்கு அறுவடை செய்யும் ஆரம்பத்தின் அடையாளமாக உள்ளது.




சபை தோன்றிய இடம் எது? எந்த நாள்? சபையின் தலைவர் யார்? போன்ற கேள்விகளுக்கெல்லாம் அப்போஸ்தலர் நூலின் முதல் பகுதியில் பதில்களைக் காணலாம். எருசலேம் மேலறையில் பெந்தெகொஸ்தே நாளன்று கிறிஸ்துவை தலையாகவும், தலைவராகவும் கொண்டு தொடங்கியதே திருச்சபை. இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு பேதுருவைக் குறித்துக் கூறியது (மத். 16:18) அன்று நிறைவேறியது. முதல் திருச்சபையின் கூடுகையில் கூடியிருந்தோர் 120 பேர், முதல் பிரசங்கி ஆதித் திருச்சபையின் முக்கியத் தூணாகிய பேதுருவே ஆவர். அதுவரை இயேசு மட்டுமே பிரசங்கித்து பார்த்திருந்த மக்களுக்கு பேதுரு பிரசங்கிப்பது வியப்பையேத் தந்தது. கர்த்தரை கயவர்கள் பிடித்த போது வாளை ஓங்கி மல்குசின் காதை மட்டுமே வெட்ட இயன்ற பேதுரு, வேலைக்கார பெண்ணின் முன் பயந்து இயேசுவை மறுதலித்த பேதுரு, படிப்பறியாத, பேதை மையுள்ள பேதுரு, பெந் தெகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்டவுடன் (அப். 2:4) ஜனத்தின் முன்பாகவும், அதி காரிகளிடமும், இஸ்ரவேலின் மூப்பர்களிடமும் தைரியமாய் பிரசங்கிக்கிறார். தனது முதல் பிரசங்கத்தில் மனந்திரும்ப வேண்டும் என்றும், ஞானஸ் நானம் பெற வேண்டும் என்றும், மாறுபாடான சந்ததியை விட்டு விலக வேண்டும் என்றும் பிரசங்கித்தார். அந்த வார்த்தைகளை அந்நாளில் அநேகர் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ஐக்கியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய் தரித்திருந்தனர் (அப். 2:36-47). இயேசுவிடம் பரலோகத்தின் திறவுகோலைப் பெற்றிருந்த பேதுரு, தனது பிரசங்கத்தில் இயேசுவை சிலுவையில் அறைந்த நபர்கள் உட்பட 3000

பேரை அந்நாளில் சபையில் சேர்த்து விட்டார் (அப். 2:36,41). மற்றொரு நாள் இவரது பிரசங்கத்தால் 5000 பேர் இயேசுவை விசுவாசித்தார்கள் (அப். 4:1-4). மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமானால், 3000 பேர் / 5000 பேர் என்று மனந்திரும்பும்போது பேதுருவினால் உண்டான பரலோகத்தின் மகிழ்ச்சியை வார்த்தைகளினால் விவரிக்க முடியுமோ? அந்த நாளின் ஆட்ட நாயகன் பேதுருவினால் முழு பரலோகமும் மகிழ்ந்து களி கூர்ந்திருக்கும்.

## பேதுருவும், அனனியா – சப்பீராளும் (அப். 5:1-11)

ஆதிகால விசுவாசிகளுக்குள் ஏழ்மை நிலையிலும், வசதி படைத்த நிலையிலும் மக்கள் இருந்தனர். தேவ பிள்ளைகள் பலர் தங்களுடைய செல்வங்களை மனம் உவந்து, அப்போஸ்தலரின் பாதத்தில் கொண்டு வந்து வைத்தனர். இத்தகைய நல்ல நோக்கத்தை உடைய திட்டத்தைப் புகழ்ச்சிக்காக பயன்படுத்த துடித்த தம்பதிகளே அனனியாவும் சப்பீராளும். தேவ சமுகத்தில் பொய் சொல்லி பிடிபட்டு தண்டனையையும் உடனடியாக அனுபவித்தனர். கணவனுக்கு கீழ்ப்படிதல் அவசியம் தான். ஆனால் தேவ



வார்த்தைக்கு விரோதமான காரியங்களுக்கு துணை போவது நல்லதல்ல என்பதை சப்பீராளின் வாழ்வு எச்சரிக்கிறது. இரண்டு காசைப் போட்ட விதவையை புகழ்ந்த தேவன், தங்கள் காணியாட்சியை விற்று அதில் பெரும் தொகையை கொடுக்க வந்த தம்பதியினரின் ஒரு பொய்யினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பை சடிதியாய் வெளிப்படுத்துகிறார். அனனியா சப்பீராளின் பாவத்துக்கு மூல காரணம் அவர்கள் இருதயத்தில் காணப்பட்ட பண ஆசையும், மற்றவர்கள் தங்களை புகழ வேண்டும் என்ற ஆசையுமே! மற்றவர்கள் இருதயத்தின் எண்ணங்களை பேதுரு அறிந்து கொண்டது எப்படி? அனனியாவும் சப்பீராளும் பேதுருவின் முகத்தைப் பார்த்து அவரைச் சாதாரண மனிதனாகவே எண்ணினர். ஆனால் பேதுருவினுள் இருந்த பரிசுத்த ஆவியானவர், பேதுருவுக்கு அளித்த வெளிப்பாட்டின் வரத்தினால் மற்ற மனிதர்களின் இருதய சிந்தைகளையும் பேதுரு உணர்ந்துக் கொண்டார். பேதுரு பெற்றிருந்த ஆவியின் வரங்களினால் மற்றவர்களின் பாவத்தை தைரியமாய் உணர்த்தியதால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு உடனே நிறைவேறியது. இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று (அப். 5:11).

## பேதுருவும், மாயவித்தைக்காரனாகிய சீமோனும் (அப். 8:5-25)

பிலிப்புவின் பிரசங்கத்தினால் அநேக சமாரியர் கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக் கொண்டு இயேசுவை விசுவாசித்தார்கள். சமாரியர்களின் மனந்திரும்புதலை கேள்விப்பட்ட பேதுருவும், யோவானும், அவர்களுக்கும் பரிசுத்த ஆவி கிடைக்க வேண்டும் என்று சமாரியாவுக்கு வந்து அவர்களுக்காக ஜெபம் பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்த போது சமாரியர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். மாயவித்தைக்காரனாகிய சீமோனும் இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் ஆவியானவரின் ஈவை பெற நாடாது, தேவ வரத்தை விலைக்கு பெற்று மொத்த வியாபாரியாக மாறத் துடித்ததன் விளைவாக சாபத்தைப்



பெற்றான். சமாரியரில் சிறியோர், பெரியோர் யாவரும் தேவனுடைய பெரிதான சக்தி இவன் தான் என்று சீமோனைக் குறித்து எண்ணி அவனுக்கு செவி கொடுத்து வந்தாலும், பேதுருவின் பார்வையில் அவன் கசப்பான பிச்சிலும், பாவக் கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காணப்பட்டான். தன்னைக் குறித்து பேதுரு தெளிவாக கூறிவிட்டவுடன் மாய வித்தைக்காரன் பயந்து, தன்னைத் தாழ்த்தி பேதுருவை தனக்காக வேண்டுதல் செய்யும்படி கேட்கிறான். பேதுருவிடம் இருந்த பரிசுத்த ஆவியானவர் காரியங்களை பேதுருவுக்கு வெளிப்படுத்தியபடியினால், பயத்துடனும் கலக்கத்துடனும் இங்கு ஒரு மாயவித்தைக்காரன் மனந்திரும்புகிறான்.

இன்னும் பல முக்கிய சம்பவங்களோடு பேதுருவோடு ஒரு பயணம் தொடரும்...




1 இலங்கையில் உணவின்றி தவித்து வரும் 63 லட்சம் மக்களுக்கு உணவு பொருட்கள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

2 பொருளாதார நெருக்கடியால் இந்த நிலை இன்னும் மோசமடையாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

3 இலங்கையில் சமாதானம் உண்டாகவும், கலவரங்கள் நிறுத்தப்படவும் ஜெபிப்போம்.

4 இலங்கையில் புதிய அரசாங்கம் அமைக்கப்படவும், தேசத்தின் பொருளாதாரம் சீரடையவும் ஜெபிப்போம்.

5 நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை விபத்துகளால் 32,873 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்துகள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

6 வாகன ஓட்டிகள் போக்குவரத்து விதிமுறைகளை அலட்சியம் செய்யாமல் விதிமுறைகளை கையாள ஜெபிப்போம்.

7 மொபைல் போனில் பேசியபடி, மது அருந்தி கொண்டு வாகனத்தை ஓட்டுவதால் விபத்துகள் ஏற்படுகிறது. சாலை விதிகளை கடைபிடித்து ஜனங்கள் அதன்படி செயல்பட ஜெபிப்போம்.

8 கடந்த 2020ஆம் ஆண்டில் நடந்த 3,66,138 சாலை விபத்துகளில் 1,31,714 பேர் உயிரிழந்துள்ளனர். இனிமேல் இப்படிப்பட்டதான உயிரிழப்புகள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

9 நாடு முழுவதும் 18 லட்சம் மாணவ, மாணவியர் நீட் தேர்வு எழுதியுள்ளனர். தேர்வு எழுதிய மாணவ, மாணவியரின் சமாதானத்திற்காக ஜெபிப்போம்.

10 எந்த மாணவ மாணவியரும் தவறான முடிவுகள் எடுக்காமல் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

11 தேர்வு முடிவுகளை குறித்த பயங்கள் விலகவும், தன்னம்பிக்கை உண்டாகவும் ஜெபிப்போம்.

12 தேர்வில் தோல்வியுற்றால் வாழ்க்கையே முடிந்து விட்டது என்ற எண்ணங்கள் மாறி, புதுநம்பிக்கை உண்டாக ஜெபிப்போம்.

13 பள்ளி, கல்லூரி செல்லும் ஒவ்வொரு மாணவ, மாணவியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

14 பள்ளிக் கல்லூரி மாணவிகளுக்கு எதிராக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகள், கற்பழிப்புகள், கடத்தல்கள் முற்றிலும் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

15 பள்ளிக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள், கலவரங்கள் முற்றிலும் ஒழிக்கப்படவும், சிறந்த கல்வி கற்பிக்கப்படவும் ஜெபிப்போம்.

16 தேசத்தில் காணப்படும் கொரோனா தொற்று முற்றிலும் அழிக்கப்படவும், தேசத்தில் சமாதானமும் சந்தோஷமும் உண்டாக ஜெபிப்போம்.

**17** தேசத்தின் பல பகுதிகளில் கொரோனா, குரங்கம்மை மற்றும் பலவிதமான தொற்றுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் சீக்கிரத்தில் குணமடையவும், இனி இந்த கிருமிகள் யாரையும் தாக்காதபடி ஜெபிப்போம்.

**18** இயற்கையின் சீற்றங்களினால் மரணங்கள் ஏற்படுவது முற்றிலும் மாற, இயற்கையின் சீற்றங்களினால் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

**19** இந்தியாவின் பல பகுதிகளில் கனமழை காரணமாக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மழையினால் மரணங்கள் நடைபெறாதபடி தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

**20** விலைவாசி உயர்வினால், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். தேசத்தின் பொருளாதரத்தில் முன்னேற்றம் உண்டாக ஜெபிப்போம்.

**21** சிறு, குறு தொழில் செய்யும் மக்களின் வாழ்வாதாரங்கள் உயர்த்தப்படவும், தேசத் தலைவர்கள் ஏழை ஜனங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த திட்டங்களை செயல்முறைபடுத்த ஜெபிப்போம்.

**22** வேலை வாய்ப்புகள் இல்லாமல் இருக்கும் வாலிபர்களுக்கு, வேலை வாய்ப்புகளை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

**23** படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிற வாலிபர்களுக்கு, ஏற்ற வேலைகள் கிடைக்கவும், ஆசீர்வாதம் உண்டாகவும் ஜெபிப்போம்.

**24** வேலையில்லாததால் தவறானக் காரியங்களுக்கு செல்கிற வாலிபர்கள் இருக்கிறார்கள். வாலிபர்களின் மனதை திசைதிருப்புகிற பொல்லாத ஆவிகளின் கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**25** வேலைக்காக காத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ற வேலைகளை வழங்க அரசு நல்ல திட்டங்களைக் கொண்டுவர ஜெபிப்போம்.

**26** தேவன் வாக்குப்பண்ணின எழுப்புதல் அக்கினி சபைகளில் ஊற்றப்பட ஜெபிப்போம்.

**27** சபைகள் பரிசுத்தமாக்கப்படவும், பிரிவினைகள் அகற்றப்படவும், ஊழியர்களுக்குள் பரிசுத்தம் உண்டாகவும் ஜெபிப்போம்.

**28** சபைகளில் சுத்திகரிப்பு உண்டாகவும், கர்த்தருக்காக வைராக்கியமான ஊழியர்கள் எழும்பவும் ஜெபிப்போம்.

**29** எல்லா சபைகளும் ஜனங்களின் இரட்சிப்பிற்காக, எழுப்புதலுக்காக மன்றாடி ஜெபிக்கிற ஜெப வீரர்களை எழுப்பவும், சபைகளில் மன்றாட்டின் ஆவி ஊற்றப்படவும் ஜெபிப்போம்.

**30** சபை இல்லாத கிராமங்களில் சபைகள் எழுப்பப்படவும், சபைகளில் அனுதினமும் மக்கள் கூட்டம் கூட்டமாக சேர்க்கப்படவும் ஜெபிப்போம்.




ஜெபம்: எஸ்தர்

# ஜெபிப்போம் ஜெபமெடுப்போம்!



நிகழ்வு: கெத்சி கிளார்வின்

## மாதிரி ஜெபம் - லேவியரின் ஜெபம்

**ஜெபத்தின் முக்கியத்துவத்தினைத் தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கும் நாம், இம்மாதத்தில் நெகேமியா வேதப்பகுதியில் லேவியர்கள் ஏறெடுத்த விசேஷ ஜெபத்தினை கற்றுக் கொள்ளப் போகிறோம். நெகேமியா 9:38ம் வசனத்தை நாம் நேரமெடுத்து தியானித்தோமென்றால், நாம் அதை ஜெபமாக மாற்றிக் கொள்ள அநேக அற்புதமான வார்த்தைகள் அங்கே உண்டு!**

▶ ''நீர் ஒருவரே கர்த்தர்; நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வானசேனைகள் உம்மைப் பணிந்து கொள்ளுகிறது'' (நெகேமியா 9:6) என்றெல்லாம் லேவியர்கள் சொல்வது தேவன் யார் என்பதை நம்முன் நினைவுக்குக் கொண்டு வருகிறது.



▶ அத்துடன், நம்மை அவரே போஷித்துப் பராமரிப்பவர்; அந்த சர்வவல்லவரின் ஆளுகையின் கீழ்தான் எல்லாமே இருக்கிறது என்று அறிக்கை செய்வது நம்மை அவருக்கு முன் தாழ்மையாக்கும்.

▶ ஆனால் நாமோ, எடுத்த எடுப்பில் நாம் விரும்பும் எதையெல்லாமோ, ''தாரும்.... தாரும்'' என்று அட்டையைப் போல் கேட்டுக் கொண்டிருக்கிறோமா?

**கீழ்க்கண்ட குறிப்புகளை தொடர்ந்து நாம் வாசித்து நமது தனி ஜெபத்திலே பயன்படுத்தும்பொழுது நம் ஜெபம் நிச்சயமாய் வித்தியாசமாய் மாறும்.**

1. நம்மைத் தெரிந்து கொண்டவர் (நெகேமியா 9:7)

2. உண்மையுள்ள இருதயத்தை அங்கீகரிப்பவர் (நெகேமியா 9:8)

3. நம்மோடு உடன்படிக்கை செய்கிறவர் (நெகேமியா 9:8)

4. சிறுமையும் எளிமையுமானவர்களைக் காண்பவர் (நெகேமியா 9:9)

5. கூப்பிடுதலைக் கேட்டு உதவுகிறவர் (நெகேமியா 9:9)

6. அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவர் (நெகேமியா 9:10)

7. நடக்கவேண்டிய வழியைக் காட்டி நடத்துகிறவர் (நெகேமியா 9:12)

8. செம்மையான நீதி நியாயங்களையும், நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் தருகிறவர் (நெகேமியா 9:13)

9. அதோடு மட்டுமல்லாமல் அவற்றைக் கற்பிக்கிறவர் (நெகேமியா 9:14)

10. இந்த உலகத் தேவைகளை நிறைவேற்றுகிறவர் (நெகேமியா 9:15)

11.பின்மாற்றமடைந்தவர்களைக்கூட வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான கைவிடாத தேவன் (நெகேமியா 9:17)

12. நம்மை விட்டு விலகாதவர்; துணையாளர் (நெகேமியா 9:19)

13. கண்டித்துப் போதிக்கும் பரிசுத்த ஆவியை அருளியிருக் கிறவர் (நெகேமியா 9:20)



14. விசேஷமாகப் பராமரிக்கிறவர் (நெகேமியா 9:21)

15. பிறரிடம் நமக்கு அநுகூலங்களை ஏற்படுத்துகிறவர் (நெகேமியா 9:23,24)

16. மறுபடி விழுந்தாலும், தூக்கிவிடுகிறவர். அவருடைய இரக்கங்களின்படியே ஏற்கனவே நம்மை அநேகந்தரம் விடுதலையாக்கியவர் (நெகேமியா 9:28)

17. கடிந்துக் கொண்டாலும் பொறுமையாயிருக்கிறவர் (நெகேமியா 9:30)

18. நாம் நிர்மூலமாகாமல் இருக்க தம் கிருபையை அளவில்லாமல் அளிக்கிறவர் (நெகேமியா 9:31)

19. அவர் நம்முடன் ஏற்படுத்தும் உடன்படிக்கையைக் கிருபையால் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகா தேவன். எனவே, நம் வருத்தங்கள் எவையும் அவருக்குமுன் அற்பமாக எண்ணப்படுவதில்லை (நெகேமியா 9:32)

20. உழைப்பை வீணாய்ப் போகாமல் காக்கிறவர் (நெகேமியா 9:37)

**இப்படிப் பல விஷயங்கள் இந்த ஜெபத்தில் உண்டு. இன்று இவற்றையெல்லாம் நம் ஜெபத்தில் எப்படி விண்ணப்பங்களாகவோ, துதியாகவோ, தாழ்மைப்படுதலாகவோ, நன்றி கூறுதலாகவோ மாற்றுவது நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். தேவன் விரும்பும் இப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுக்க வாலிபர்களே நீங்கள் ஆயத்தமா???**

# ஹெலன் கெல்லர்



ஹெலன் கெல்லர், பிறக்கும் பொழுது ஆரோக்கியமாகவே பிறந்தார். அவர் பிறந்து 19 மாதங்களில் ஏற்பட்ட கடும் காய்ச்சல் காரணமாக கண் பார்வை, கேட்கும் திறன், பேசும் திறன் ஆகியவற்றை இழந்தார்.

ஆனி சல்லிவன் கெல்லரின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அடுத்த 49 ஆண்டுகள் கெல்லரும், ஆனியும் ஒன்றாகவே கழித்தனர். பிறர் பேசும் பொழுது அவர் உதடுகளில் கை வைத்து அதிர்வுகள் மூலம் அவர் பேசுவதை புரிந்து கொள்ளும் கலையை கெல்லருக்கு ஆனி கற்பித்தார். பத்து வயது நிறைவதற்கு முன் ஹெலன் கெல்லர், கண்பார்வையற்றோருக்கான பிரெயில் முறையில் ஆங்கிலம், பிரெஞ், ஜெர்மன், கிரேக்கம், லத்தீனம் ஆகிய மொழிகளைக் கற்றார். அமெரிக்காவின் விரிவுரையாளரானார். பல புத்தகங்களை எழுதினார். பட்டதாரி படிப்பை முடித்தார். உலகப் புகழ் பெற்ற பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தார். மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு வழக்குரைஞராகவும் திகழ்ந்தார்.

காது கேட்காது, கண் தெரியாது இருந்த 19 மாதக் குழந்தைக்கு நான் முயற்சி எடுத்து, நேரம் ஒதுக்கி அவளை தலைசிறந்த மாணவியாக உருவாக்குவேன் என்று முடிவு எடுத்து, அவர்களால் உருவாக்கப்பட்ட ஹெலன் கெல்லரை தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஹெலன் கெல்லரை உருவாக்கியவர் ஆனி என்பது குறிப்பிடத்தக்கது.




**வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!**

## EVERY 1ST SUNDAY

**(4TH SEPTEMBER)**

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center,
Ajantha Mahal, No.3,6th West
Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
No:62 2nd Floor, Benny
Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center,
Jehovah Jireh Towers,
51/8D/3, 1st Floor, Tiruchendur
Road, Muniasamypuram,
(Land mark : South Police
Station to Kamaraj college Road)
9442885315

**SANKARANKOIL (2:30-5)**
Gethsemane Prayer
CenterSekinah Mahal
Mullai Nagar
9750955548 / 8344949555

## EVERY 2ND SATURDAY

**(10TH SEPTEMBER)**

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre
2/56, Upstairs, 1st Street, Main
Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY

**(11TH SEPTEMBER)**

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School,
Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsamane Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM – 5.30PM)**
St. Paul's Matriculation School,
Kovilpatti.
9677858766 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building
R.A. Nursing Institute SCV
Computers (top floor) Main
Road, Alangulam, Near Union
Office Opposite.
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center,
No.203, Madurai Road, (opp
Anantham Silk) Dr. Kamaraj
Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School,
Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

**SATHANKULAM (3-5:30PM)**
Hendry Matric Higher Secondary School
Mela Sathankulam
Ct: 9442885315

## EVERY 3RD SUNDAY

**(18TH SEPTEMBER)**

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90, 1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur,
9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via),
Keelamathapuram,
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**NALUMAVADI (3-5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi 9442885315

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsamane Prayer Centre, MBT Road, Navalpur
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY

**(24TH SEPTEMBER)**

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
M K Complex 71,
Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY

**(25TH SEPTEMBER)**

**THIRUVALLUR (3-5:30)**
Gethsemane Prayer Center
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3PM-5PM)**
Gethsemane Prayer center,
Near Arun Hospital, Royakottai Road,
Ct: 9962085523 | 9524999711

## MUMBAI (5PM - 8PM)

1st sunday - Dharav
2nd Sunday- Bhandup
3rd Sunday - Malad 9004882470

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்




சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
Youtube மற்றும் Comforter TV 7am

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547

Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL

WE'RE GOING LIVE
REVIVAL IGNITERS

ON SUNDAY SEPTEMBER 25TH,
TIME: 3 - 5PM

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

# ஜெப எழுப்புதல்!

# Revival

கடந்த ஏழு மாதங்களாக 7 துறைகளில் **(7 Mountains)** எழுப்புதல் உண்டாக நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படி அந்தத் துறைகளில் எழுப்புதல் உண்டாகும் என்பதையும் பார்த்தோம். இந்த மாதம் முதல் 7 விதமான எழுப்புதல் (ஜெப எழுப்புதல், சுத்திகரிப்பின் எழுப்புதல், வல்லமையின் எழுப்புதல், இரட்சிப்பின் எழுப்புதல், வசன எழுப்புதல், சுவிசேஷ எழுப்புதல், மகிமையின் எழுப்புதல்) பற்றிப் பார்க்கப் போகிறோம். இந்த மாதம் ஜெப எழுப்புதலைப் பற்றிப் பார்க்கலாம்.

எழுப்புதலுக்கான அடிப்படை திறவுகோல் ஜெபமாகும். ஜெபத்தின் மூலமாக எழுப்புதல் பிறக்கிறது, ஜெபத்தின் விளைவாக எழுப்புதல் பரவுகிறது, ஜெபிக்கின்ற தேவ பிள்ளைகள் மூலமாகத்தான் ஜெப எழுப்புதலைக் கொண்டு வர முடியும். இயேசு ஜெபிக்கிற ஜெபத்தைப் பார்த்து அவருடைய சீஷர்கள் எப்படி ஜெபிக்க வேண்டும், எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும் என்று கேட்பதை நாம் வேதத்தில் பார்க்க முடிகிறது. ஜெபிக்கிறவர்களால் மட்டுமே ஜெபிக்கிறவர்களை எழுப்ப முடியும். ஆண்டவர், ஜான் நாக்ஸ் என்ற தேவ மனிதனின் ஜெபத்தின் மூலம் ஸ்காட்லாந்து தேசத்தில் மாபெரும் எழுப்புதலை அனுப்பினார். ஜான் நாக்ஸ் ஒவ்வொருநாளும் இரவும், பகலும் ஜெபிக்கும் போது மிகுந்த மன வேதனையோடு, கண்ணீரோடு ''ஆண்டவரே, ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும், இல்லையென்றால் என்னை எடுத்துக் கொள்ளும்'' என்று ஜெபிப்பாராம். ஆண்டவர் இவரின் கண்ணீரின் ஜெபத்தைக் கேட்டு ஸ்காட்லாந்து தேசத்தை அசைத்தார். 1561-64ஆம் ஆண்டுகளில் ராணி மேரிக்கும் ஜான் நாக்ஸ் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. ''இங்கிலாந்தின் எல்லா ராணுவத்தைவிட ஜான் நாக்ஸின் ஜெபங்களுக்கு பயப்படுகிறேன்'' என்று ஸ்காட்லாந்தின் ராணியாகிய மேரி கூறினார்.



இவர் மூலமாக அந்தத் தேசத்தில் திரளான ஜெபிக்கிற மக்களை தேவன் எழுப்பினார். ஒரு மாபெரும் ஜெப எழுப்புதல் இவர் மூலமாக ஸ்காட்லாந்து தேசத்தில் உருவானது. திரளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டனர். நம்முடைய தேசத்திலும் ஆண்டவர் ஜெப எழுப்புதலை ஊற்ற ஆரம்பித்து விட்டார். முன்பு இல்லாத அளவிற்கு ஜனங்கள் சபைகளிலும், ஜெபக் குழுக்களிலும், சிறுவர்கள், வாலிபர்கள், பெண்கள், ஆண்கள் என பலதரப்பட்டோர் இணைந்து பல மணி நேரங்கள் ஜெபிக்க ஆரம்பித்து விட்டார்கள். குறிப்பாக லாக்டவுண் நாட்களுக்கு பின்பு வாலிபர்கள் Conference call, Google meet, Zoom App மூலமாக பல மணிநேரங்கள் ஜெபிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். நம் தேசத்தின் வாலிபர்களின் மீது ஜெப எழுப்புதல் ஊற்ற ஆரம்பித்து விட்டது. ''அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது'' (அப். 4:31). நீங்களும் உங்கள் ஜெபக்குழுக்களிலும், தனிப்பட்ட ஜெபத்திலும் என் மீதும் ஜெப எழுப்புதலை ஊற்றும் என்று ஜெபிக்கும் போது, உங்கள் மீது எழுப்புதல் அக்கினி போடப்படும், நீங்கள் இருக்கிற இடமும் அசைக்கப்படும்.

எனக்கன்பான வாலிபர்களே, ஒரு தனிப்பட்ட மனிதனின் ஜெபம் ஒரு நாட்டையே இரட்சிப்புக்குள் கொண்டு வர முடியுமானால், உங்கள் ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் நிச்சயமாக நம் இந்தியாவில் எழுப்புதலை அனுப்புவார், இன்றே ஜெபிக்க ஆரம்பியுங்கள். உங்கள் ஜெபத்தால் தேசத்தை மூடுங்கள், ஜெபிப்பதற்கு சூழ்நிலையைப் பார்க்காதீர்கள், இயேசுவை நோக்கிப் பாருங்கள், இந்தியாவில் எழுப்புதல் நிச்சயம்! ●

நிகழ்வு கெத்சி கிளார்வின்

# வேதாகமத்தில் பறவைகள்

# மயில்



அன்பு வாலிபர்களே! ஒவ்வொரு மாதமும் நம் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில பறவைகளையும் அவைகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சில காரியங்களையும் தொடர்ந்து பார்த்து வருகிறோம். அதின் வரிசையில் இன்று நாம் நம் தேசிய பறவையாகிய "மயில்" பற்றி பார்க்கப் போகிறோம்.
நமது தேசியப் பறவை அழகு வண்ண தோகைகளால் கவர்ந்திழுக்கும் தோற்றம் கொண்டது. மயில் "பாசியானிடே" என்னும் பறவைக் குடும்பத்தைச் சேர்ந்தது, வெப்ப மண்டல நாடுகளில் ஈரப்பதமான பகுதிகளே மயில்களின் வசிப்பிடம்.

**'மயில்' என்ற பறவை நம் பரிசுத்த வேதாகமத்தில் ஒரு சில இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பறவையைக் குறித்து சில தகவல்களை தொடர்ந்து நாம் வாசிப்போம்.**

- ஆண் மயிலுக்கு அழகான நீண்ட வால் பகுதி உண்டு. இதனைத் தோகை என்பர். இதற்கு தலையில் கொண்டையும் உண்டு.
- ஆண் மயில்கள் அழகான பளபளப்பான, நீலம் கலந்த பச்சை நிறமுடையவை. இதன் தோகையில் வரிசையாக கண் புலங்கள் உள்ளன.
- பெண் மயிலுக்கு தோகை இல்லை.
- ஆண் மயில் பெண் மயிலை கவர்வதற்காக தோகையை விரித்து ஆடும்.
- மழைக்காலங்களில் இந்தியக் காடுகளில் தோகை விரித்தாடும் மயில்களின் அழகு காண கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும். மேலும் இம்மயில்கள் ஆடம்பரத்தின் அடையாளமாக கருதப்படுகின்றது.

**வேதாகமத்தில் மயிலைக் குறித்து நாம் எங்கு காணலாம்?**

- ''ராஜாவுக்குச் (சாலொமோன்) சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத்தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும்'' (1 இராஜா. 10:22) என்று கூறப்பட்டுள்ளது.
- சாலொமோன் அரசன் தன்னுடைய அரண்மனைப் பூங்காவின் அழகினைக் கூட்டுவதற்கு மயில்களை இந்திய துணைக் கண்டத்திலிருந்து இறக்குமதி செய்தான் என்பது வரலாற்று உண்மை.
- மயில்கள் நீண்ட கால புகழ் பெற்றவை. சாலொமோன் இராஜாவுக்கு இந்திய அரசர்கள் மயில்களை அன்பளிப்பாக வழங்கினர் என்று அறிய முடிகிறது. பண்டைக் காலத்தில் மயில்கள் பொன்னுக்கு நிகராக மதிக்கப்பட்டன என்பதை இது காட்டுகிறது.

**மயில்களிடமிருந்து நாம் நம் வாழ்விற்கு அறிந்துக்கொள்ள வேண்டிய சில உண்மைகள்:**

**வெளித்தோற்றம்:** மயில்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் பறவை. ஆனால் அதின் குரலோ இனிமையாக இருக்காது. எனவே, மக்களின் வெளித்தோற்றம் மட்டும் நன்றாக இருந்தால் போதாது; அவர்களின் உள்ளத்தின் நினைவுகளும் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தைகளும் கூட இனிமையாக இருக்க வேண்டும்.

**தற்பெருமை:** மயில்கள் தற்பெருமைக்கு உருவகமாக கருதப்படும். இந்தியப் பறவைகளிலேயே மிகவும் கர்வமானதும் ஆடம்பரமானதுமான தோற்றமுடையது மயில் ஆகும். ''தான்'' என்று அகங்காரத்துடன் இருக்கும் மக்களை நினைவுப்படுத்துகிறது இந்தப் பறவை.

நம் வேதாகமத்தில் பல இடங்களில் பெருமையையும் அகந்தையையும் கண்டித்து உணர்த்தப்படுகின்றது. மேலும், ''தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்'' (யாக்கோபு 4:6) என்று நமக்கு எச்சரிக்கப்படுகின்றது.

**அன்பு வாலிபர்களே! கர்த்தர் எதிர்ப்பவைகள், அவர் விரும்பத்தகாதவைகள் நம்மிடம் இருக்கிறதா என்பதை அவர் சமூகத்தில் ஆராய்ந்து சீர்செய்வோம். வெளித்தோற்றத்தை வைத்து ஆண்டவர் உங்களை நேசிக்கவில்லை. இயேசு இருதயத்தின் அழகை வைத்து தான் உங்களையும் என்னையும் நேசிக்கிறார். மயில் வெளித்தோற்றத்தில் அழகான பறவை தான். ஆனால் தன் அழகான தோற்றத்தால் தற்பெருமையுடன் காணப்படுகிறது. மயிலைப் போல வெளித்தோற்றத்தை வைத்து எதையும் சாதிக்கலாம் என்று நினைத்து விடாதீர்கள். தேவன் உங்களது அகத்தோற்றத்தையே பார்க்கிறார், நினைவு கூருங்கள்! ●**

நிகழ்வு: காலேப்

# RED Alert சாலொமோன்!

இந்த ரெட் அலர்ட் தொடரின் மூலம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவர்கள் செய்த தவறுகளினால், எச்சரிக்கப்பட்டும் மனந்திரும்பாததினால், எப்படி தங்களது முடிவை சந்தித்தார்கள் என்று தியானித்து வருகிறோம். இவைகள் நமக்கு திருஷ்டாந்தமாகவும், கடைசி காலத்தில் வாழும் நமக்கு எச்சரிப்பின் அடையாளமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது (1 கொரி. 10:11). இந்த எச்சரிப்புகளைக் கேட்டு நம்மை நாம் சரி செய்து கொள்வோமேயானால், பெரிய ஆசீர்வாதங்களைப் பார்க்கலாம். கடந்த மாதம் இயேசுவின் சீஷனாக இருந்த யூதாஸ்காரியோத்தின் வீழ்ச்சியும், அதற்கான காரணத்தையும் தியானித்தோம்.



இந்த ரெட் அலர்ட் பகுதியில் இஸ்ரவேலின் இராஜாவும், தாவீதின் மகனான சாலொமோனைக் குறித்து தியானிக்கலாம். சாலொமோன் இராஜாவின் ஆரம்பம் மிகவும் பிரமாண்டமாகவும், மகிமையாகவும் இருந்தது. அவர் கேட்ட ஞானத்தை மட்டுமல்லாமல், கேளாத ஐசுவரியத்தையும் தேவன் அவருக்கு தந்தார். தாவீது ஆசைப்பட்டும், அவரால் கட்ட முடியாத தேவனுடைய ஆலயத்தைக் கட்டி அதை பிரதிஷ்டை பண்ணினார். இப்படி தேவனுக்கு பிரியமாக வாழ்ந்த சாலொமோன் ஏன் பின்மாற்றமடைந்தார்? அதற்கு காரணம் என்ன? 1 இராஜாக்கள் 11:1-12ம் வசனங்களில் உள்ள பகுதியில் இந்த சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது.

## உலகத்தின் மீது ஆசை!

சாலொமோனுக்கு தேவன் ஞானத்தையும் ஐசுவரியத்தையும் அதிகமாகக் கொடுத்தார். அதினிமித்தம் அவன் கீர்த்தி தேசமெங்கும் பரவியது. அவனுக்கு எதிராக எழும்பின சத்துருக்கள் முற்றிலுமாக சங்கரிக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் தேச எல்லையெங்கும் சமாதானமும், செழிப்பும் உண்டானது.



இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் என்று பாருங்கள். இப்படி செல்வமும், செழிப்பும் பெருக, பெருக சாலொமோனின் இருதயம் கர்த்தரிடத்திலிருந்து விலகி, உலகத்தின் மேல் சென்றது. உலகத்தின் ஆசைகளை அனுபவிக்க ஆசைப்பட்டு, அநேக அந்நிய ஸ்திரீகளை திருமணம் செய்து, மனைவியாகவும் மறுமனையாட்டியாகவும் கொண்டான். இதுவே அவன் வீழ்ச்சிக்கு முதல் காரணமாக அமைந்தது.

நம்மீது அன்புகூர்ந்து இயேசு கிறிஸ்து நம்மை ஆசீர்வதித்து பெருக பண்ணும் போது, அந்த ஆசீர்வாதம் கர்த்தரை மகிமைப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். இல்லையென்றால், அது கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதமாகவே இருந்தாலும், அது தேவனை விட்டு நம்மை பிரித்துவிடும். ''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்;...'' (1 யோவான் 2:15) என்று வசனம் சொல்கிறது. இன்றைக்கு எந்த காரியம் உங்களையும் தேவனையும் பிரிக்கிறது? எது உங்கள் ஜெபத்தைத் தடுக்கிறது? எது வேத வாசிப்பை கெடுக்கிறது? என்பதை ஆராய்ந்து பார்த்து, தேவ அன்பை விட்டு பிரிக்கிறக் காரியங்களை நம்மை விட்டு அகற்றுவோம், தேவ அன்பில் நிலைத்திருப்போம்.

## அந்நிய தேவர்களை பின்பற்றுதல்!

சாலொமோன் கர்த்தருடைய வார்த்தையை மீறி அந்நிய தேசத்து ஸ்திரீகள் மேல் ஆசை வைத்தான். அவர்கள் சாலொமோனை விக்கிரகங்களை சேவிக்கப் பண்ணி, இஸ்ரவேல் தேசம் முழுவதையும் விக்கிரகத்தால் நிரப்பி, தேசத்தை தீட்டுப்படுத்தினார்கள். இஸ்ரவேல் தேசமும், அந்த மக்களும் வழிவிலகிப் போக இது காரணமாக இருந்தது.



கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டு, அவருக்கு பிரியமாக இருந்த சாலொமோன் வழிவிலகிப் போனதினிமித்தம், தேசமே பாதிக்கப்பட்டு, கர்த்தரை விட்டு விலகக் காரணமாக அமைந்தது. இது தேவனுடைய இருதயத்திற்கு எந்த அளவிற்கு பாதிப்பைக் கொண்டு வந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். நாமும்கூட அநேக நேரங்களில் உலகத்தைப் பின்பற்றி, தேவனுக்குப் பிரியமில்லாத பாவக் காரியங்களை விக்கிரகமாக நம் வாழ்வில் வைத்து விடுகிறோம். அதனால் தேவனின் அன்பை விட்டு பிரிந்து, பாவத்தின் அடிமைத்தனத்தில் சிக்கிக் கொள்கிறோம்.

## தேவ எச்சரிப்பை உதாசீனப்படுத்துதல்!

சாலொமோன் இராஜா உலக சிற்றின்பங்களின் மீது ஆசை வைத்து, தேவனை விட்டுப் பிரிந்து, வழிவிலகி போனான். ஆனால் தேவன் அவன் மீது வைத்த தமது மிகுந்த அன்பினிமித்தம், அவனை மீண்டும் அவரிடத்தில் சேர்த்துக்



கொள்ள, சாலொமோனுக்கு இரண்டு முறை தரிசனமாகி அவனை எச்சரித்தார். ஆனால் அந்த எச்சரிப்பை ஏற்றுக்கொள்ளாதபடியால் அவன் மேல் கர்த்தர் கோபமானார் (1 இராஜா. 11:10). அவன் செய்த பாவத்தினிமித்தம் இஸ்ரவேல் தேசம் இரண்டாக பிரிக்கப்பட்டது. இன்றைக்கும் தேவன் நம்மை கீழ்ப்படிய சொல்கிற காரியங்கள் நமக்கு கடினமாகத் தோன்றினாலும், அது நம்முடைய நன்மைக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவுமே இருக்கும். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணப்படும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். ஒருவேளை இதை வாசித்துக் கொண்டிருக்கிற உங்களை தேவன் ஏதோ காரியத்தைக் குறித்து எச்சரிப்பாரானால் நீங்கள் தாமதமின்றி மனந்திரும்ப உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**அன்பான வாலிபர்களே, சாலொமோனின் ஆரம்பம் நன்றாக தான் இருந்தது. ஆனால் முடிவு பரிதாபமாக இருந்தது. அவன் உலகத்தில் வைத்த அன்பு, அவன் ஆசை இச்சைகளுக்கு இடங்கொடுத்து அவன் திருமணம் செய்த அந்நியப் பெண்கள், அவன் இருயத்தை வழுவிப் போகப் பண்ணினார்கள். இன்றைய காலத்தில் இதில் என்ன தவறு என்று நாம் அனுமதிக்கும் தவறான நட்பு, தொடர்பு மற்றும் சிநேகம் தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரித்து, அழிவின் பாதைக்கு கொண்டு சென்று விடும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களும் ஏதோ ஒரு தவறான நட்பு அல்லது உறவில் சிக்கி இருப்பீர்களானால், உடனே உங்கள் தவறை ஒப்புக்கொண்டு, பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டு விடுங்கள். ஏனெனில் இதுவே கடைசி தருணமாகவும் இருக்கலாம். தேவன் உங்கள் மேல் வைத்துள்ள அன்பினிமித்தமே உங்களை எச்சரிக்கிறார். "அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை;..." (ஆதி. 6:3).**

அடுத்த மாதம் இன்னொரு நபரோடு **Red Alert** பகுதியில் சந்திக்கலாம்...

# வாலிபர் கொண்டாட்டம்



நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் ஆகஸ்ட் 15ஆம் தேதி (சுதந்திர தினத்தன்று) வாலிபர் கொண்டாட்டம் நடைபெற்றது. இக்கூடுகையில் சுமார் 2000 வாலிபர்கள் கலந்துக் கொண்டார்கள். சகோதரர் சாம் ஜெபராஜ் அவர்கள் ஆரம்ப ஜெபம் செய்து ஆரம்பித்து வைத்தார்கள். பாடல், ஆராதனை மற்றும் வாலிபர்களின் சாட்சிகள் மூலம் தேவ நாமம் மகிமைப்பட்டது. தேசத்திற்கான ஜெபம், எழுப்புதல் ஜெபம் என்று ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் ''எழுப்புதல்'' என்ற தலைப்பில் செய்தியளித்து, வந்திருந்த வாலிபர்களுக்கு தேவன் கொடுத்த எழுப்புதல் தரிசனத்தை விளக்கி கூறி அபிஷேகத்துக்குள் நடத்தினார். தேவன் எழுப்புதல் அக்கினியை அளவில்லாமல் ஊற்றி அபிஷேகித்து அனுப்பினார். அதுமட்டுமல்லாமல் தினமும் எழுப்புதலுக்காகவும், படிக்கிற மற்றும் வேலை செய்கிற இடங்களில் ஜெபக்குழு ஆரம்பித்து ஜெபிப்பேன் என்றும் அநேகர் தீர்மானம் எடுத்து கடந்து சென்றனர்.

**தேவனுக்கே மகிமை!**

















# ஆசிரியர் தினம்

ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, வாழ்க்கை, பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்து, ஒரு உண்மையான வழிகாட்டியாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில், செப்டம்பர் 05 'ஆசிரியர் தினமாக கொண்டாடி வருகிறோம். வாழ்க்கை என்ற பாடத்தைக் கற்றுத் தந்து, மாணவர்களுக்கு உண்மையான வழிகாட்டியாக விளங்கி, ஒவ்வொரு மாணவர்களையும் சிறந்த மனிதர்களாக்குவது ஆசிரியர்கள் தான். அத்தகைய எழுச்சிமிக்க மாணவர்களை ஒரு சிறந்த ஆசிரியரால் தான் உருவாக்க முடியும்.

**ஆசிரியர் பணி என்றால் என்ன?**

ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பது இல்லை; ஒழுக்கம், பண்பு, பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி, அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் உன்னதப் பணியாகும். அப்படிப்பட்ட தெய்வீகமானப் பணியை மாணவர்களுக்கு அளிக்க, தன்னலமற்ற, தியாக மனப்பான்மை கொண்டவராக இருந்தால் மட்டும் போதாது; கற்பிக்கும் தொழிலை நேசிப்பவராகவும் இருப்பவர்கள் தான் உண்மையான ஆசிரியர்கள். ஒவ்வொரு ஆசிரியர்களும் உருவாக்கும் மாணவர் சமூகமானது, ஒரு நாட்டின் எதிர்காலத்தை மட்டுமல்ல, இந்த உலகின் எதிர்காலத்தையே தீர்மானிக்கிறது. அனைத்து மக்களின் நல்வாழ்வும் அந்த மாணவர் சமூகத்தின் கைகளில் தான் உள்ளது. எனவே இந்த இடத்தில் ஆசிரியர் என்பவரின் பணியானது அனைத்தையும் விட உயர்ந்து நிற்கிறது.

ஆசிரியர் பணி என்பது ஒரு உயிரோட்டமான பணி, ஆய்வு ரீதியான பணி, உளவியல் ரீதியான பணி, சேவை ரீதியான பணி, அர்ப்பணிப்புள்ள பணி, கால நேரமற்ற பணி. ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டும் ஆசிரியராக இருப்பதில்லை. அவர் தன் வாழ்வின் பெரும் பகுதி நேரங்கள் ஆசிரியராகவே இருக்கிறார். மனித வாழ்வில் திருப்பு முனையை ஏற்படுத்தி, அதற்கு அர்த்தத்தைக் கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது.

தன்னுடைய வாழ்வில் ஆசிரியர் பணியை புனிதமாகக் கருதி, பிற ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக இருந்து, ஒரு நல்ல ஆசிரியரால் எவ்வளவு தூரம் பயன்பட முடியும் என்பதை தமது இறுதி காலம் வரை வாழ்ந்துக் காட்டி, ஒரு மாபெரும் தத்துவமேதையாக உலகிற்குத் தன்னை வெளிப்படுத்திய டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 05ம் நாளை, இந்தியாவில் 1962ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடி வருகிறோம். இந்த தியாகமுள்ள ஆசிரியர்களை நாமும் கொண்டாடுவோம்.

எங்களை உருவாக்கிய அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்!

HAPPY Teachers' DAY

# செய்திகள்!

## 5.83 கோடி பேர் வருமான வரி தாக்கல்!

## கடைசி நாளில் 72,000 பேர் பதிவு!

வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான அவகாசம் நிறைவடைந்த நிலையில், 5.83 கோடி பேர் ஐடி ரிட்டன் தாக்கல் செய்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 2021-2022ஆம் நிதியாண்டுக்கான, வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான அவகாசம், ஏப்ரல் மாதம் தொடங்கியது. ஆண்டுக்கு ₹2.5 லட்சம் உச்ச வரம்பை தாண்டும் அனைவரும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய வேண்டும். இந்நிலையில், 2021-22ம் நிதியாண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான அவகாசம் நேற்று முன்தினத்துடன் முடிந்தது.

இது குறித்து, வருமான வரி அதிகாரிகள் கூறிய போது, ''இனிமேல், வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய ஆண்டுக்கு ₹5 லட்சம் வரை வருவாய் ஈட்டுவோர் ₹1,000 அபராதம் செலுத்த வேண்டும். அதற்கு மேல் வருவாய் ஈட்டுவோர் ₹5,000 அபராதம் செலுத்த வேண்டும். டிசம்பர் 31 வரை ரிட்டன் தாக்கல் செய்யலாம். ஜனவரி முதல் மார்ச் வரை தாமதமாக தாக்கல் செய்தால் ₹10,000 அபராதம் செலுத்த வேண்டும் என்றனர்.

மொத்தம், 5.83 கோடி பேர் வருமான வரி தாக்கல் செய்துள்ளனர். கடந்த நிதியாண்டில், கால அவகாசம் டிசம்பர் 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. இந்த கால கட்டத்தில் 5.89 கோடி பேர் வருமான வரி தாக்கல் செய்தனர். கடைசி நாளான நேற்று முன்தினம் மட்டும் 72 லட்சம் பேர் கணக்கு தாக்கல் செய்துள்ளனர். - தினகரன், 02 ஆகஸ்ட் 2022.

## 5 ஆண்டில் 2வது அதிகபட்சமாக

## ஜூலை ஜிஎஸ்டி வசூல் ₹1.49 லட்சம் கோடி!

## கடந்தாண்டை விட 28% அதிகம்!

கடந்த ஜூலை மாதம் ஜிஎஸ்டி மூலம் ₹1.49 லட்சம் கோடி வசூலாகி உள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 28 சதவீதம் அதிகமாகும். மேலும், 5 ஆண்டுகளில் 2வது அதிகபட்ச வசூல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சரக்கு மற்றும் சேவை வரியான 'ஜிஎஸ்டி', கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை 1ம் தேதி நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டது. கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வுக்குப் பின் ஜிஎஸ்டி வசூல் ஒவ்வொரு மாதமும் அதிகரித்து வருகிறது. அந்த வகையில், கடந்த ஜூலை மாதம் ₹1.49 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலாகி இருப்பதாக ஒன்றிய நிதி அமைச்சகம் நேற்று அறிக்கை வெளியிட்டது.

அதில், 'நாட்டின் ஒட்டுமொத்த ஜிஎஸ்டி வருவாய் ₹1 லட்சத்து 48 ஆயிரத்து 995 கோடி. இதில் ஒன்றிய அரசின் பங்கு ₹25,751 கோடி. மாநில அரசின் பங்கு ₹32,807 கோடி. ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ₹79,518 கோடி. கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடும் போது 28 சதவீதம் வருவாய் அதிகரித்துள்ளது என கூறப்பட்டுள்ளது. மேலும், ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்ட 5 ஆண்டில் இது 2வது அதிகபட்ச வசூலாகும். கடந்த ஏப்ரல் மாதம் அதிகபட்சமாக 1.68 லட்சம் கோடி வசூலானது. தமிழகத்தைப் பொறுத்தவரை கடந்த ஜூலை மாதம் ₹8,449 கோடி ஜிஎஸ்டி வசூலாகி உள்ளது. - தினகரன், 02 ஆகஸ்ட் 2022.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே வேதத்தில் உள்ள பழங்கள், காய்கறிகள் பற்றியக் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையைக் கண்டறிந்து, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1. வனாந்தரத்தில் எவைகளைக் கண்டுபிடிப்பதுபோல இஸ்ரவேலை கண்டுபிடித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
2. தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு கூழ்காய்ச்சிய பானையில் எந்த காய்களின் நிமித்தம் உண்டான தோஷத்தை, எலிசா இல்லாமற்போகப்பண்ணினார்?
3. எஸ்போனே, எலெயாலேயே, உன் -------------- பழங்களுக்காகவும், உன் -------------- பழ அறுப்புக்காகவும் ஆரவாரிக்கிற சந்தோஷ சத்தம் விழுந்துபோயிற்று.
4. சீயோன் குமாரத்தி எந்த தோட்டத்திலுள்ள குடிசைபோல மீந்திருக்கிறாள்?
5. தான் மந்தை மேய்க்கிறவனும், எந்த பழங்களை பொறுக்கிறவனுமாயிருந்தேன் என்று அமத்சியாவிடம் ஆமோஸ் கூறினான்?
6. நேசத்தால் சோகமடைந்த சூலமித்தி, எந்தப் பழங்களால் தன்னை ஆற்றும்படி தன் தோழிகளிடம் கூறினாள்?
7. எசேக்கியா இராஜா பிழைக்கும்படி எந்த பழத்தின் அடையினால் பற்றுப்போடப்பட்டது?
8. ஆரோனின் அங்கியின் ஓரங்களில், சுற்றிலும் பொன்மணியுடன் இடம் பெற்ற பழம் என்ன?
9. சாலொமோன் இராஜா, கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த தூண்களில் எந்த பழத்தின் வேலைப்பாடுகள் செய்யப்பட்டது?
10. இஸ்ரவேல் புத்திரர் என்ன பழக்குலையை அறுத்ததினிமித்தம் அந்த இடம் எஸ்கோல் பள்ளத்தாக்கு என்னப்பட்டது?

கடந்த மாத விடைகள்

1. களைகளின் உவமை (மத். 13:24-30)
2. பொல்லாத ஊழியக்காரனின் உவமை (மத். 18:23-35)
3. இரண்டு குமாரரின் உவமை (மத். 21:28-32)
4. திராட்சத்தோட்ட குத்தகையின் உவமை (மத். 21:33-46)
5. நல்ல சமாரியன் (லூக்கா 10:25-37)
6. பாதிராத்திரி சிநேகிதனின் உவமை (லூக்கா 11:5-10)
7. மதிகேடான ஐசுவரியவான் (லூக்கா 12:16-21)
8. பெரிய விருந்தின் உவமை (லூக்கா 14:16-24)
9. உக்கிராணக்காரனின் உவமை (லூக்கா 16:1-12)
10. நல்ல மேய்ப்பனின் உவமை (யோவான் 10:1-5)

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்**

**15. 09. 2022**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 08 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

